بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ    نَحۡمَدُہٗ وَنُصَلِّیۡ عَلٰی رَسُوۡلِہِ الۡکَرِیۡمِ    وَعَلٰی عَبۡدِہِ الۡمَسِیۡحِ الۡمَوۡعُوۡد
وَلَقَدۡ نَصَرَکُمُ اللّٰہُ بِبَدۡرٍ وَّاَنۡتُمۡ اَذِلَّۃٌ

# பதர்
வார இதழ் - காதியான்

Weekly BADAR Qadian Tamil

தொகுதி 10

இதழ் 23

வருடாந்திர சந்தா ரூபாய் 600/-

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அப்துர் ரஹ்மான் தாஹிர்

ஹிஜ்ரி கமரி 1446 துல்ஹஜ் 08 ★ ஹிஜ்ரி ஷம்ஸி 1406 - இஹ்ஸான் 05 ★ 05 ஜீன் 2025

## அல்லாஹ்வின் கட்டளை

اِنَّ الَّذِیۡ فَرَضَ عَلَیۡکَ الۡقُرۡاٰنَ لَرَآدُّکَ اِلٰی مَعَادٍ

**பொருள்**
**இந்தக் குர்ஆனின் போதனையை உமக்கு கடமையாக்கியவன் உம்மை (உம்முடைய) திரும்புமிடத்திற்கு நிச்சயமாக மீண்டும் கொண்டு வருவான்.**

**(அல்கஸஸ்: 86)**

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹூல்லாஹூத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸுர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸுர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவியாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்

## இஸ்லாத்தின் உண்மையின் ஆன்மா எவ்வளவு வலிமையானது என்றால் அது அந்நிய சமுதாயங்களை இஸ்லாத்தை தழுவும் நிர்பந்தத்திற்கு ஆளாக்கி விடுகின்றது என்பதை பெரும் பெரும் ஆங்கிலேயே ஆராய்ச்சியாளர்களுக்கும் ஒப்புக் கொள்ள நேரிடுகின்றது

வாக்களிக்கப்பட்ட மஸீஹும் உறுதிமொழி வழங்கப்பட்ட மஹ்தியுமான
ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றுகளிலிருந்து……

### நல்லொழுக்க அற்புதம்

அல்லாஹ்விடம் சீர்திருந்த விரும்புவதும், தமது ஆற்றலை செலவிடுவதும் போன்றவை ஈமானிய வழிமுறையாகும். நபிமொழியில் வருகின்றது. எவர் நம்பிக்கையுடன் தனது கரத்தை துஆவிற்காக உயர்த்துகின்றாரோ அல்லாஹ் அவரது துஆவை ரத்து செய்வதில்லை. எனவே இறைவனிடம் வேண்டுங்கள்; மேலும் நம்பிக்கையுடனும், உண்மையான எண்ணத்துடனும் வேண்டுங்கள். எனது அறிவுரை மீண்டும் இதுவே ஆகும். அதாவது சிறந்த ஒழுக்கங்களை வெளிப்படுத்துவது என்பது தனது அற்புதத்தை வெளிப்படுத்துவது ஆகும். நான் அற்புதத்தை வெளிப்படுத்தக் கூடியவனாக ஆக விரும்புகின்றேன் என்று ஒருவர் கூறினால் அவர் இதனை நினைவிற் கொள்ளட்டும்! அதாவது ஷைத்தான் அவரை ஏமாற்றத்திற்கு ஆளாக்கியிருக்கின்றான். கிராமத் (அற்புதம்) என்பதன் பொருள் மாயாஜாலம் மற்றும் வித்தைகள் காட்டுவது என்பது அல்ல. அற்புதத்தின் மூலமாக மக்களுக்கு இஸ்லாத்தின் உண்மைத்துவம் தெரிய வருகின்றது. நேர்வழி கிடைக்கின்றது. நான் மீண்டும் உங்களுக்கு கூறுகின்றேன்: மாயா ஜாலமும், வித்தையும் நல்லொழுக்கத்தில் அடங்காது. எனவே இது ஷைத்தானிய தூண்டுதலாகும். பாருங்கள்! பூமியின் பல்வேறு பகுதிகளில் தென்படுகின்ற கோடிக்கணக்கான முஸ்லிம்கள் இருக்கின்றனர். இவர்கள் வாளின் அழுத்தத்தால், பலவந்தத்தால் முஸ்லிம்கள் ஆகியிருக்கின்றனரா என்ன? இல்லை! இது முற்றிலும் தவறாகும். இது இஸ்லாத்தின் அற்புதத்தின் தாக்கமாகும். இதுவே அவர்களை ஈர்த்து வந்துள்ளது. அற்புதங்கள் பலவகைப்படும். அவற்றில் ஒன்று ஒழுக்க ரீதியிலான அற்புதமாகும். அது எல்லா மைதானங்களிலும் வெற்றிகரமானதாகும்.

(மல்ஃபூஸாத், தொகுதி 1, பக்கம் 125, காதியான் பதிப்பு 2018-ம் ஆண்டு)

## ஒவ்வொரு நபரின் செல்வத்திலும் அவரது உறவினர்களுக்கும் ஏழைகளுக்கும் பயணிகளுக்கும் உரிமை இருக்கின்றது. ஒருவரின் செல்வமும் அவருக்கே மட்டுமானதாக இருப்பதில்லை. மாறாக அதில் பிறருக்கான உரிமையும் அடங்கியிருக்கின்றது

وَاٰتِ ذَا الۡقُرۡبٰی حَقَّہٗ وَالۡمِسۡکِیۡنَ
وَابۡنَ السَّبِیۡلِ وَلَا تُبَذِّرۡ تَبۡذِیۡرًا

(17:27)

ஸய்யிதுனா ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் இந்த வசனத்திற்கு விளக்கவுரை வழங்கியவாறு இவ்வாறு கூறுகின்றார்கள்:

ஏழைகளுக்கும் வழிப் போக்கர்களுக்கும் கூட அல்லாஹ் உரிமையை நிர்ணயித்துள்ளான்.

وَفِیۡۤ اَمۡوَالِہِمۡ حَقٌّ لِّلسَّآئِلِ وَالۡمَحۡرُوۡمِ

என்று வேறொரு இடத்தில் தெளிவாக கூறியிருக்கின்றான். மனிதனின் செல்வங்களில் யாசிப்பவர் போன்ற நபர்களுக்கும் கூட உரிமை உள்ளது. ஏழைகளுக்கு உரிமை இருக்கின்றது என்று கூறியிருப்பதற்கான ஒரு காரணம் இதுவாகும். அதாவது உலகில் செல்வந்தர், ஏழை என்ற நிலை மாறிக் கொண்டிருக்கின்றது. இன்று எவர் ஏழையாக இருக்கின்றாரோ அவர் ஒரு காலத்தில் செல்வந்தராக இருந்திருப்பார்.மேலும் இன்று செல்வந்தராக இருப்பவர் ஒரு காலத்தில் ஏழையாக இருந்திருப்பார். மேலும் அந்த நேரத்தின் செல்வந்தர்கள் அவருடன் நல்ல முறையில் நடந்திருந்தனர். எனவே முழு உலகத்தையும் ஒட்டுமொத்த ரீதியில் பார்த்தால் எவருடைய செல்வமும் அவருக்கு மட்டுமான செல்வமாக இருப்பதில்லை. இன்னும் கூறப்போனால் அவற்றில் மற்றவர்களுடைய உரிமையும் அடங்கியிருக்கின்றது. இதற்கான இரண்டாவது காரணம் இதுவாகும். அதாவது உலகின் எல்லா பொருட்களையும் அல்லாஹ் ஒட்டுமொத்தம மனித குலத்திற்காகவே படைத்திருக்கின்றானே தவிர ஸைது அல்லது பக்ர் என தனி நபர்களுக்காக மட்டும் அல்ல. எனவே ஸைது அல்லது பக்ர் ஏதாவது காரணத்தினால் அதிக செல்வம் படைத்தவராக ஆகிவிட்டால் அதனால் உலகின் பொருட்களுக்கு உரிமைத்துவத்தில் ஸைது மற்றும் பக்ருடன் சரிசமமாக பங்கு வகிக்கும் அந்த மற்ற மக்களின் உரிமை பொய்யாகிவிடாது. சிறப்பான உழைப்பின் காரணமாக ஸைது அல்லது பக்ருடைய உரிமையை இஸ்லாம் ஒப்புக் கொள்கின்றது.

பயணிகளுக்கான உரிமை என்பது இவ்வாறாக அமைகின்றது. அதாவது இவர் வேறொரு இடத்திற்கு செல்லும்போது அவர் இவருடன் நல்ல முறையில் நடந்து கொள்கின்றார். எனவே வேறொரு இடத்தைச் சார்ந்த பயணிக்கு தொண்டாற்றுவது இவருடைய கடமையாகும். அப்போது தான் விருந்து உபசரிப்பிற்கான உரிமை நிறைவேற்றப்பட்டுக் கொண்டிருக்கும். வழிப் போக்கர்களின் உரிமை தொடர்பாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: நீங்கள் எதாவது ஊருக்கு செல்லும்போது மூன்று நாட்கள் வரை உங்களுக்கு விருந்தினருக்கான உரிமை இருக்கின்றது. அப்போது அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! ஊர் வாசிகள் உரிமையை கொடுக்கவில்லை என்றால்? என்று ஸஹாபிகள் கேட்டனர். கூறினார்கள்: நீங்கள் பறித்துக் கூட கொள்ளலாம். (அபூதாவூத்) இந்தக் கட்டளை என்பது இஸ்லாமிய நாகரீகம் நிலைபெற்றுவிடும் அந்தக் காலத்திற்கானது ஆகும்.ஏனெனில் அந்நாட்களில் மக்கள் அவரிடமிருந்து விருந்தினருக்கான உரிமையை பெற்றுக் கொள்ள முடியும். இந்தக் கட்டளை உலகில் அமல்படுத்தப்பட்டுவிட்டால் பின்னர் ஹோட்டல்கள் மற்றும் தங்குமிடங்களின் காரணமாக உருவாகியிருக்கின்ற ஏராளமான சீர்கேடுகள் நீங்கி விடும். உலகில் பயணம் மேற்கொள்வது என்பது ஏழைகளுக்கும் கூட உயர்தரமான தர்பிய்யத்திற்கான ஒரு வழிமுறையாக அமைந்து எளிதாகிவிடும். ஆனால், வேதனை என்னவென்றால் முஸ்லிம்களே இந்தக் கட்டளையை மறந்து விட்டனர்.

(தஃப்ஸீரே கபீர்,தொகுதி 4, பக்கம் 323, காதியான் பதிப்பு 2010)

* * * * * *

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

**முஃதா போரின் நிலைமைகள் மற்றும் சம்பவங்களின் பின்னணியில்**
**ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அருளுக்குரிய வாழ்க்கை வரலாறு &**
**இந்தியா மற்றும் பாகிஸ்தானிற்கு இடையில் ஏற்பட்டுள்ள பதற்றம் தொடர்பாக துஆவிற்கன அறிவுரை**

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் முஃதா போரின் நிலைமைகள் மற்றும் சம்பவங்களை ஸஹாபா பெருமக்களுக்கு எடுத்துரைத்தவாறு மேலும் ஹஸ்ரத் காலித் பின் வலீத் (ரலி) அவர்களைப் பற்றிய குறிப்பு வந்தபோது தம் அருளுக்குரிய விரலை உயர்த்தியவாறு கூறினார்கள்:
அல்லாஹ்வே! இவர் உன்னுடைய வாள்களுள் ஒரு வாள் ஆவார். நீ இவருக்கு உதவி செய்வாயாக!
அந்நாளில் இருந்து ஹஸ்ரத் காலித் பின் வலீத் (ரலி) அவர்கள் ஸைஃபுல்லாஹ் என்று அழைக்கப்பட்டார்கள்.
அதாவது அல்லாஹ்வுடைய வாள் என்று அழைக்கப்பட்டார்கள்

இறை வழியில் தமது குதிரையின் கால்களை வெட்டிய முதல் நபராக ஹஸ்ரத் ஜஃபர் (ரலி) அவர்கள் இருந்தார்கள்

**உலகின் பொதுவான சூழ்நிலைகளுக்காக துஆக்களை தொடர்ந்து செய்து வாருங்கள் என்று நான் கூறிவருகிறேன். குறிப்பாக தற்காலத்தில் பாகிஸ்தான் மற்றும் இந்தியாவுடைய சூழ்நிலைகளுக்காக துஆ செய்யுங்கள். அல்லாஹ் அநீதியை முடிவுக்கு கொண்டு வருவானாக! அநீதி இழைக்கப்பட்டவர்களை பாதுகாப்பானாக! அரசாங்கங்களுக்கும் அறிவை வழங்குவானாக! போர்களை நோக்கி முன்னேறுவதற்கு பதிலாக சமாதானம் மற்றும் சமரசம் ஆகியவற்றால் விவகாரத்தை தீர்ப்பார்களாக! சர்வதேச ஒப்பந்தங்களை பேணக் கூடியவர்களாக இருப்பார்களாக!**

**ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்**
(அய்யதுஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இஸ்லாமாபாத், டில்ஃபோர்ட் - இங்கிலாந்திலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 02 மே 2025** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1406 ஆண்டு **ஹிஜ்ரத்** மாதம் **02ம் தேதி** அன்று ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ
وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ
أَمَّا بَعْدُ فَأَعُوذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيمِ
بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيمِ
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ○ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ○
مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ○ إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِيْنُ ○
اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ○
صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ
غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ○

முஃதா போரை பற்றிய குறிப்பு சென்று கொண்டிருந்தது. இதை குறித்து மேற்கொண்டு விபரம் இவ்வாறு வருகிறது; பெருமானார் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் ரவாஹா (ரலி) அவர்களை வழி அனுப்பி வைத்த போது, ஹஸ்ரத் அப்துல்லாஹ் (ரலி) அவர்கள் அன்னாரிடம், அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! தங்களின் சார்பாக நினைவு வைத்துக் கொள்ளும் வகையில் எனக்கு ஏதேனும் கட்டளையிடுங்கள் என்று கேட்டுக் கொண்டார்கள். அதற்கு, நீங்கள் நாளை எவ்வாறான நகரை சென்றடைவீர்கள் என்றால் அங்கு குறைவாகத்தான் ஸஜ்தா செய்யப்படுகின்றன; அங்கு நீங்கள் அதிகமாக ஸஜ்தா செய்யுங்கள் என்று பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

இது மிகப் பெரும் அறிவுரையாகும். தற்காலத்தில் இங்கு நாம் வசிக்கின்ற நாடுகளிலும் இதே நிலைதான் காணப்படுகிறது. அல்லாஹ்வை மக்கள் மறந்து விட்டார்கள். இக்காலக்கட்டத்தில் அஹ்மதிகள் தம் இறை வணக்கங்களின் பக்கம் மிக அதிகம் கவனம் செலுத்த வேண்டும்.

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! இன்னும் அறிவுரை கூறுங்கள் என்று ஹஸ்ரத் அப்துல்லாஹ் (ரலி) அவர்கள் கேட்டுக் கொண்டார்கள். அதற்கு, அல்லாஹ்வை நினைவு கூருங்கள்; இது நீங்கள் விரும்புகின்ற ஒவ்வொரு விவகாரத்திலும் உங்களுக்கு உதவி செய்யக் கூடியதாக இருக்கும் என்று பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

இறைவனை நினைவு கூருவது மிகவும் அவசியமாகும்.

பின்னர் ஹஸ்ரத் அப்துல்லாஹ் (ரலி) அவர்கள் செல்ல ஆரம்பித்தபோது, மீண்டும் திரும்பி வந்து, அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! அல்லாஹ் ஒருவனாவான்; அவன் ஒற்றைப்படையை விரும்புகின்றான் என்று கூறினார்கள். அதற்கு பெருமானார் (ஸல்) அவர்கள் நீங்கள் கேள்வி கேட்டுக் கொண்டே இருப்பீர்களா என்ன? இப்பொழுது நிறுத்திக் கொள்ளுங்களேன்; நீங்கள் 10 நபர்களுடன் தீமை செய்துள்ளீர்கள் என்றாலும் கூட ஒருவருடன் நன்மை செய்வதை விட்டு நீங்கள் விலகிக் கொள்ளக் கூடாது என்றார்கள். அதாவது இந்த அளவு தீமைகளுக்கு பிறகும் அல்லாஹ்வுக்காக நன்மை செய்தால் அல்லாஹ்வுடைய அச்சம் உள்ளத்தில் இருந்தால் அல்லாஹ் மன்னித்து விடுவான். ஆகவே நன்மை செய்யக் கூடிய மக்களை அல்லாஹ் மன்னிக்கின்றான். அவனது அருள் மிகவும் விசாலமானது. நன்மை செய்ய வேண்டும் என்பதிலும் தீமையை விட்டு விலகி இருக்க வேண்டும் என்பதிலும் இயன்ற அளவு முயற்சி செய்யுங்கள் என்றார்கள். அதாவது ஒவ்வொரு முறையும் 10 தீமைகளை செய்து விட்டு அதற்குப் பிறகு ஒரு நன்மை செய்வது என்பது இதன் பொருள் அன்று. மாறாக, உண்மையான முறையில் பாவமன்னிப்பு கேட்கக் கூடியவர் அல்லாஹ்வின் அருளை பெறக் கூடியவராக ஆக வேண்டும் என்பதற்காக தீமைகளுக்கு பிறகு அந்த தீமைகளை விட்டு தப்பிப்பதற்கு முயற்சி செய்கிறார்; நன்மை செய்கிறார்.

எவ்வாறிருப்பினும், பெருமானார் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் அப்துல்லாஹ் (ரலி) அவர்களிடம், நீங்கள் ஒரு நன்மையை செய்வதை விட்டும் விலகி இருக்கக் கூடாது என்று கூறியபோது ஹஸ்ரத் அப்துல்லாஹ் (ரலி) அவர்கள், அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! இதற்கு பிறகு நான் எந்த கேள்வியும் கேட்க மாட்டேன் என்று கூறினார்கள். பெருமானார் (ஸல்) அவர்களால் நியமிக்கப்பட்ட தளபதிகளை மக்கள் வழி அனுப்பி வைத்தார்கள். ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் ரவாஹா (ரலி) அவர்களை வழி அனுப்பி வைக்கும் போது அவர் அழ ஆரம்பித்தார். உங்களை எந்த விஷயம் அழச் செய்கிறது? என்று ஸஹாபிகள் அவரிடம் கேட்டார்கள். அதற்கு அவர் அல்லாஹ்வின் மீது ஆணையாக! எனக்கு உலகின் மீதும் நேசம் கிடையாது; உங்கள் மீதும் நேசம் கிடையாது. ஆனால் நரகத்தைக் குறித்து பெருமானார் (ஸல்) அவர்கள் ஓதிய ஒரு வசனத்தை நான் கேட்டுள்ளேன். அந்த வசனம் இதுவாகும்:

إِنْ مِّنْكُمْ إِلَّا وَارِدُهَا كَانَ عَلٰى رَبِّكَ حَتْمًا مَّقْضِيًّا

உங்களுள் ஒவ்வொருவரின் மீதும் அது (அதாவது நரகம்) இறங்கும். இது உம் இறைவனின் விதிக்கப்பட்ட உறுதியான வாக்குறுதியாகும்.(மர்யம்: 72)

அது என் மீது இறங்கிய பிறகு நான் திரும்பி வருவது எவ்வாறானதாக இருக்கும் என்று எனக்கு தெரியவில்லை; இந்த சூழ்நிலைகள் தோன்ற உள்ளனவே! என்றார்கள். அதற்கு முஸ்லிம்கள், அல்லாஹ் உங்களுடன் இருப்பானாக. அல்லாஹ் அதை உங்களை விட்டு நீக்குவானாக. அதாவது தீமைகளை உங்களை விட்டு நீக்குவானாக ; நீங்கள் எங்கள் சார்பாக நல்லடியார்களாக திரும்பி வருவீர்கள் என்று வழி அனுப்பி வைத்த அனைவரும் துஆ செய்தவாறு வழியனுப்பி வைத்தார்கள்.

அம்மக்களிடம் இந்த அச்சம் இருந்தது. நம்பிக்கை கொண்டவர்களை குறித்து அல்லாஹ் கூறும் போது, அவர்கள் நரகில் நுழைய மாட்டார்கள் என்று கூறியுள்ளான். ஆனால், இங்கு அதன் பொருள், காஃபிர்கள் சார்பாக கொடுக்கப்படும் துன்பத்தின் காரணமாக நம்பிக்கை கொண்டவர் நரகின் ஒரு பகுதியை இங்கு பார்ப்பார் என்பதாகும். இறந்த பிறகு உள்ள நரகம் அவர்களை விட்டு வெகு தொலைவில் இருக்கும். ஸஹாபிகள் இந்த விஷயத்தை புரிந்து கொண்டவாறு, இந்த உலக துன்பங்களையும் அல்லாஹ் உங்களை விட்டு நீக்குவானாக! நீங்கள்

எங்கள் சார்பாக நல்லடியார்களான நிலையில் திரும்பி வருவீர்கள். அல்லாஹ்வின் அருள் உங்களுடன் இருக்கட்டுமாக! என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் ரவாஹா (ரலி) அவர்கள் ஜுமுஆ தொழுகைக்குப் பிறகு மதீனாவை விட்டு புறப்பட்டுச் சென்றார்கள் என்று எழுதப்பட்டுள்ளது. ஹஸ்ரத் இப்னு அப்பாஸ் (ரலி) அவர்களிடமிருந்து அறிவிக்கப்பட்டுள்ளது. அவர்கள் கூறுகிறார்கள்: பெருமானார் (ஸல்) அவர்கள் முஃதா எனும் இடத்தை நோக்கி ஸஹாபிகளின் படையை அனுப்பி வைத்தார்கள். அதில் அப்தில்லாஹ் பின் ரவாஹா (ரலி) அவர்களும் இருந்தார்கள். அது ஜுமுஆ நாளாக இருந்தது. படையில் இருந்த மற்ற அனைத்து ஸஹாபிகளும் புறப்பட்டு விட்டார்கள். அப்துல்லாஹ் பின் ரவாஹா (ரலி) அவர்களோ, நான் பின்தங்கி விட்டு பெருமானார் (ஸல்) அவர்களுடன் ஜுமுஆ தொழுது விட்டு அவர்களோடு சேர்ந்து கொள்கிறேன் என்று கூறினார்கள். பிறகு அவர்கள் பெருமானார் (ஸல்) அவர்களுடன் ஜுமுஆ தொழுதார்கள். அன்னார் (ஸல்) இவர்களை கண்டபோது, உங்களுடைய தோழருடன் செல்ல விடாமல் உங்களை தடுத்தது எது? என்று கேட்டார்கள்.அதற்கு, என்னுடைய விருப்பம்தான்; நான் தங்களுடன் ஜுமுஆ தொழ வேண்டும் என்றும், பிறகு அவர்களுடன் சேர்ந்து கொள்ளலாம் என்றும் விரும்பினேன் என்று அவர்கள் கூறினார்கள். அதற்கு, பெருமானார் (ஸல்) அவர்கள் பூமியில் எதுவெல்லாம் இருக்கின்றனவோ அவை அனைத்தையும் நீங்கள் செலவு செய்தாலும் எவர்கள் இந்த போருக்காக புறப்பட்டு விட்டார்களோ அவர்களுக்கு கிடைத்த அருளை உங்களால் பெற முடியாது என்றார்கள். அதாவது நான் போர்ப் படையை அனுப்பி வைத்து விட்டேன்; நான் ஜுமுஆ தொழுவேன் என்று நீங்கள் கூறியிருக்காமல் உடனடியாக நீங்கள் புறப்பட்டிருக்க வேண்டியது உங்களது கடமையாகும் என்றார்கள்.

ஹஸ்ரத் ஃகாலித் பின் வலீத் (ரலி) அவர்கள் முதல்முறையாக முஸ்லிம்களுடன் சேர்ந்து கொண்டு போர் செய்த குறிப்பும் காணக் கிடைக்கிறது. ஹஸ்ரத் ஃகாலித் பின் வலீத் (ரலி) அவர்கள் பிரபல்யமான குதிரை வீரராக இருந்தார்கள். அவர்களும் (இப்போது) இந்த படையில் சாதாரண ஒரு போர் வீரராக இருந்தார்கள். பெருமானார் (ஸல்) அவர்கள் இந்த படையை ஒன்று திரட்டிய போது ஹஸ்ரத் காலித் பின் வலீத் (ரலி) அவர்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டு மூன்று மாதங்கள்தான் ஆகியிருந்தன.முஸ்லிம்கள் மதீனாவில் இருந்து சிறிது தூரம் சென்ற பிறகு எதிரிகளுக்கு இவர்களைப் பற்றிய செய்தி கிடைத்து விட்டிருந்தது. அவர்கள் முஸ்லிம்களை எதிர்கொள்வதற்காக ஆயத்தங்களை மேற்கொண்டிருந்தார்கள். அணிவகுத்து செல்லக் கூடிய செய்தியையும் மதீனத்து நயவஞ்சகர்களும், யூதர்களும் பரப்பி இருந்தார்கள். அதன் மூலமாக முஸ்லிம்களை எதிர்கொள்ள இருந்த கிறிஸ்தவர்கள் தம்மை காப்பாற்றிக் கொள்வதற்கான வழிவகையை செய்து கொள்ள வேண்டும் என்பதற்காக,

ஷுரஹ்பீல் பின் அம்ர் என்பவன் அரேபியாவுடன் இணைந்திருந்த சிரியாவின் தெற்கு பகுதியில் ரோமானியர்களின் கவர்னராக இருந்தான். மதீனாவில் உள்ள ரோமானிய ஒற்றர்கள் மூலமாக இந்த படை புறப்பட்ட செய்தி அவனுக்கு கிடைத்திருந்தது. முஸ்லிம்கள் சிரியாவை நோக்கி அணிவகுத்து வந்து கொண்டிருக்கின்றார்கள் என்ற செய்தியை அவன் ரோமானியர்களுக்கு தெரிவிப்பதற்காக ஆட்களை அனுப்பி இருந்தான். பிறகு சிரியாவின் தெற்கு பகுதியில் ரோமானியர்களின் நட்புக் கோத்திரங்களிலிருந்து படையை ஒன்று திரட்ட ஆரம்பித்திருந்தான். இஸ்லாமிய படையை பற்றி தகவல் அறிந்து கொள்வதற்காக அவன் அப்போதே சில நபர்களுடன் தம்முடைய சகோதரனை முன்களப் படையாக அனுப்பி வைத்திருந்தான். இன்னொரு புறம், ஷூரஹ்பீல் பின் அம்ர் ஒரு லட்சத்திற்கும் கூடுதலான நபர்களைக் கொண்ட படையை ஆயத்தம் செய்திருந்தான் என்றும் எழுதப்பட்டுள்ளது. முஸ்லிம்கள் வாதியுல் குறாவை சென்றடைந்த போது, ஷூரஹ்பீல் தன்னுடைய சகோதரனான ஸதூஸை 50 இணைவைப்பாளர்களுடன் அனுப்பி வைத்தான். அவர்கள் முஸ்லிம்களுடன் போர் செய்தார்கள். ஸதூஸுடைய கூட்டாளிகளுக்கு தோல்வி ஏற்பட்டது. ஸதூஸூம் கொல்லப்பட்டான். முஸ்லிம்கள் முன்னேறிச் சென்றார்கள். சிரியாவில் உள்ள மஆன் எனும் பகுதியை சென்றடைந்தார்கள். இந்த இடம் முஃதாவுக்கு முன்னால் வருகிறது. எதிரிகளுடைய பெரும் எண்ணிக்கையைக் குறித்தும் அவர்கள் ஒன்று கூடி இருப்பதை குறித்தும் ஸஹாபிகளுக்கு இந்த இடத்தில் தான் தெரிய வந்தது. ஹிர்கல் ஒரு லட்சம் ரோமானியர்களுடன் பல்கா பகுதியில் மாப் எனும் இடத்திற்கு வந்திருந்த செய்தியும் கிடைத்தது. பல்வேறு கோத்திரங்களைச் சார்ந்த ஒரு லட்சம் அரேபியர்களும் அவனுடன் சேர்ந்து விட்டிருந்தார்கள்.

அல்லாமா ஸூர்கானி கூறுகிறார்கள்: ஒரு லட்சம் பேரைக் கொண்ட படை என்பது ஷூரஹ்பீல் ஒன்று திரட்டிய படையாக இருக்கவும் வாய்ப்புள்ளது.

முஸ்லிம்கள் மஆன் எனுமிடத்தில் இரு இரவுகளை கழித்தார்கள். அவர்கள் இது தொடர்பாக ஆலோசனை செய்து கொண்டிருந்தார்கள்.சிலரோ நாம் பெருமானார் (ஸல்) அவர்களுக்கு கடிதம் எழுதி அனைத்து செய்திகளையும் தெரிவிப்போம். அன்னார் மேற்கொண்டு படையை அனுப்பி நமக்கு உதவி செய்யலாம் அல்லது ஏதேனும் கட்டளை வழங்கலாம். அதற்கேற்ப நாம் நடந்து கொள்ளலாம் என்றார்கள். அப்போது, ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் ரவாஹா (ரலி) அவர்கள் முன்னேறிச் செல்லுமாறு தைரியமூட்டினார்கள். என் சமுதாயமே! அல்லாஹ்வின் மீது ஆணையாக! எந்த விஷயத்தை நீங்கள் இப்போது வெறுக்கின்றீர்களோ அதை பெறுவதற்காகத்தான் நீங்கள் புறப்பட்டு வந்தீர்கள். நீங்கள் ஷஹாதத்தைப் பெற வேண்டும் என்று விருப்பம் கொண்டுதான் புறப்பட்டு வந்தீர்கள். நாம் மக்களுடைய எண்ணிக்கையை கண்டோ அல்லது ஆற்றலைக் கண்டோ ஜிஹாது செய்வது கிடையாது. நம்முடைய ஜிஹாது எண்ணிக்கையின் காரணமாக நடப்பது கிடையாது அல்லது ஆற்றலை கண்டு நடப்பது கிடையாது. மாறாக, இறைவன் நமக்கு கண்ணியம் அளித்த அந்த உண்மையான மார்க்கத்துடன் நாம் அவர்களுடன் போர் செய்கின்றோம். ஆகவே நீங்கள் முன்னேறி செல்லுங்கள். இரண்டு நன்மைகளில் ஒன்று உங்களுக்கு கிடைத்து விடும். வெற்றி அல்லது ஷஹாதத். இந்த இரண்டு அந்தஸ்துகளும் மோசமானது ஒன்றும் கிடையாது என்றார்கள்.

இறைவன் மீது ஆணையாக! இப்னு ரவாஹா உண்மையை சொன்னார் என்று ஸஹாபா பெருமக்கள் கூறினார்கள். பிறகு, ஸஹாபா பெருமக்கள் முன்னேறிச் சென்றார்கள். தூகூமுல் பல்காவை சென்றடைந்தபோது அவர்கள் ஹிர்கல் உடைய படையை சந்தித்தார்கள். அந்த படை ரோமானியர்கள் மற்றும் அரேபியர்களை உள்ளடக்கியதாக இருந்தது. இந்த குடியிருப்பு பல்கா உடைய குடியிருப்புகளில் ஒன்றாக இருந்தது. அது மஷாரிஃப் என்றும் அழைக்கப்பட்டது. எதிரி நெருங்கி வந்தபோது முஸ்லிம்கள் முஃதா என்று அழைக்கப்பட்ட இடத்தை நோக்கி நகர்ந்து விட்டார்கள். அங்குதான் உண்மைக்கும் பொய்க்கும் இடையில் போர் நடைபெற்றது. முஸ்லிம்கள் இணை வைப்பாளர்களை எதிர்கொள்வதற்காக ஆயத்தங்களை மேற்கொண்டார்கள். ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் இந்த போரில் கலந்து கொண்டார்கள். அவர்கள் அறிவிக்கின்றார்கள்: எதிரி எங்களை நெருங்கிய போது நாங்கள் இந்த அளவு எண்ணிக்கையையும், இந்த அளவு சிறந்த ஏற்பாட்டையும், ஆயுதங்களையும், குதிரைகளையும், பட்டுத் துணிகளையும், தங்கங்களையும் ஒருபோதும் கண்டது கிடையாது. எந்த அளவுக்கு என்றால் எனது கண்கள் நிலைகுத்தி நின்றன. ஹஸ்ரத் ஸாபித் பின் அக்ரம் (ரலி) அவர்கள் என்னிடம், அபூ ஹுரைராவே! நீங்கள் பெரும் படையை பார்க்கிறீர்களா? என்று கேட்டார்கள். அதற்கு, நான் ஆம்! என்றேன். நீங்கள் எங்களுடன் பத்ர் போரில் கலந்து கொள்ளவில்லை. நாங்கள் அதிக எண்ணிக்கையின் காரணமாக அதில் வெற்றி பெறவில்லை என்றார்கள்.

இப்னு இஸ்ஹாக் அவர்கள் இவ்வாறு எழுதுகிறார்கள்: முஸ்லிம்கள் இணை வைப்பாளர்களுக்கு எதிராக ஆயத்தங்களை மேற்கொண்டார்கள். படையின் வலப்பக்கத்திலும் இடப்பக்கத்திலும் கண்காணிப்பாளர்களை நியமித்தார்கள். ஹஸ்ரத் ஸைது (ரலி) அவர்களின் ஷஹாதத்தை குறித்து இவ்வாறு எழுதுப்பட்டுள்ளது; பிறகு மக்கள் பரஸ்பரம் போரிடத் துவங்கினார்கள். ஹஸ்ரத் ஸைது (ரலி) அவர்கள் கடுமையாக போரிட்டார்கள். பெருமானார் (ஸல்) அவர்களால் வழங்கப்பட்ட கொடியுடன் அவர்கள் ஜிஹாது செய்தார்கள். எந்த அளவுக்கு என்றால், எதிரியுடைய ஈட்டிகளின் காரணமாக ஷஹாதத் எனும் பானத்தை அருந்தி விட்டார்கள்.

பிறகு ஹஸ்ரத் ஜஃபர் (ரலி) அவர்கள் இஸ்லாத்தின் கொடியை பிடித்துக் கொண்டார்கள். அவர்கள் ஜிஹாது செய்தார்கள். போர் புரிவது அவர்களுக்கு தடையாக ஆனபோது அவர்கள் ஷுக்ரா எனும் தம் குதிரையை விட்டு இறங்கினார்கள். அதன் கால்களை வெட்டினார்கள். பிறகு ஜிஹாது செய்தார்கள். எந்த அளவுக்கு என்றால், அவர்கள் ஷஹீதாகி விட்டார்கள். இறைவழியில் தம் குதிரையின் கால்களை வெட்டிய முஸ்லிம்களுள் ஹஸ்ரத் ஜஃபர் (ரலி) அவர்கள் முதலாவது நபராவார்கள். பனூ முர்ரா பின் அவ்ஃப் கோத்திரத்தைச் சார்ந்த நபர் ஒருவர் முஃதா போரில் கலந்து கொண்டார். அவர் கூறுகிறார்: நான் இப்பொழுதும் ஹஸ்ரத் ஜஃபர் (ரலி) அவர்களை பார்த்துக் கொண்டிருப்பது போல் தெரிகிறது. அவர் தம்முடைய ஷுக்ரா எனும் குதிரையிலிருந்து கீழே இறங்கி அதன் கால்களை வெட்டினார்கள். பிறகு ஜிஹாது செய்தார்கள். எந்த அளவுக்கென்றால், அவர்கள் ஷஹீதாகி போனார்கள். அப்போது

அவர்கள் இவ்வாறு கூறினார்கள்:

يَا حَبَّذَا الْجَنَّةُ وَاقْتِرَابُهَا
طَيِّبَةً وَبَارِدًا شَرَابُهَا
وَالرُّوْمُ رُوْمٌ قَدْ دَنَا عَذَابُهَا
كَافِرَةٌ بَعِيْدَةٌ أَنْسَابُهَا
عَلَيَّ إِذْ لَاقَيْتُهَا ضِرَابُهَا

பொருள்: சொர்க்கத்தையும், நரகத்தையும் பற்றி என்ன கூறுவது?அதன் நீர் எந்த அளவு தூயதாகவும், குளிர்ந்ததாகவும் உள்ளது; ரோமுக்கும், ரோமானியர்களுக்கும் தண்டனை நெருங்கிவிட்டது. அவர்கள் நிராகரிப்பாளர்கள் ஆவார்கள். அவர்களின் வெகுமதி வெகு தொலைவில் உள்ளது. நான் அவர்களுடன் போரிடும் போது அவர்களை தாக்குவது என் மீது கடமையாகும்.

ஓர் அறிவிப்பில் வருகிறது: ஹஸ்ரத் அபூ ஆமிர் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் ஜஃபர் (ரலி) அவர்கள் உடலில் ஆயுதங்களை அணிந்து கொண்டு இணை வைப்பாளர்கள் மீது தாக்குதல் நடத்தினார்கள். எதிரிகளுடன் கலந்து விடக் கூடாதே! என்ற அச்சம் அவர்களுக்கு ஏற்பட்ட போது அவர்கள் போர் கவசங்களை எறிந்து விட்டார்கள். அவர்கள் எதிரிகள் மீது தாக்குதல் நடத்தினார்கள். ஈட்டியை எறிந்து போரிட்டார்கள். எந்த அளவுக்கென்றால், அவர்கள் ஷஹீதாகி போனார்கள்.

இப்னு ஹிஷ்ஷாம் அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் ஜஃபர் பின் அபீ தாலிப் (ரலி) அவர்கள் தம் வலது கையில் கொடியை பிடித்திருந்தார்கள். அந்த கை வெட்டப்பட்டது. பிறகு இடது கையில் பிடித்துக் கொண்டார்கள். அதுவும் வெட்டப்பட்டது.பிறகு அந்த கொடியை வெட்டப்பட்ட கைகளுடன் தம் நெஞ்சோடு பிடித்துக் கொண்டார்கள். எந்த அளவுக்கென்றால், அவர்கள் ஷஹீதாகி போனார்கள். அப்போது அவர்களின் வயது 33 ஆக இருந்தது.அந்த கைகளுக்கு பதிலாக அல்லாஹ் அவர்களுக்கு இரு இறக்கைகளை வழங்கினான். அதன் மூலமாக அவர்கள் சொர்க்கத்தில் தாம் விரும்பிய இடத்திற்கு பறந்து செல்கிறார்கள்.

ரோமானியன் ஒருவன் அவர்களை தாக்கி அவர்களை இரு துண்டாக பிளந்து விட்டான் என்றும் கூறப்படுகின்றது.

இமாம் புஹாரி அவர்களும் இமாம் பைஹக்கீ அவர்களும் ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் உமர் (ரலி) அவர்களிடமிருந்து அறிவிக்கிறார்கள். அவர்கள் கூறுகிறார்கள்: நான் அந்த போரில் கலந்து கொண்டேன். நாங்கள் ஹஸ்ரத் ஜஃபர் (ரலி) அவர்களை தேடினோம். ஷஹீதானவர்களுடன் அவர்களை கண்டோம். அவர்களின் உடலில் அறுபதையும் விட அதிகமான ஈட்டிக் காயங்களும், அம்புக் காயங்களும் இருப்பதைக் கண்டோம். இன்னோர் அறிவிப்பில் வருகிறது; நான் அவர்களது உடலில் ஈட்டி மற்றும் வாள்களுடைய 50 காயங்களை கண்டோம். அதில் எந்த ஒரு காயமும் முதுகில் இருக்கவில்லை ; அனைத்தும் உடலின் முன் பகுதியில்தான் இருந்தன. ஹஸ்ரத் ஜஃபர் (ரலி) அவர்கள் ஷஹீது ஆன பிறகு இஸ்லாத்தின் கொடியை ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் ரவாஹா (ரலி) அவர்கள் பிடித்துக் கொண்டார்கள். அவர்கள் தம் குதிரையில் முன்னேறி சென்றார்கள். அப்போது அவர்கள் சற்று தாமதிக்கலானார்கள். சிறிது சந்தேகம் ஏற்பட்டது; அச்சம் ஏற்பட்டது. அப்போது அவர்கள் இந்த கவிதையை பாடினார்கள். அதன் மொழியாக்கம் என்னவென்றால்,

உள்ளமே விருப்பத்துடனோ அல்லது வெறுப்புடனோ என்ன ஆனாலும் சரி, போரில் நீ குதித்தே ஆக வேண்டும் என்று நான் சத்தியம் செய்துள்ளேன். மக்கள் போருக்காக ஆயத்தமாகி வில்லுடைய நாணை இழுத்து நிற்கும் போது சொர்க்கத்தை நீ வெறுப்பவனாக உன்னை நான் காணுவதேன்! என்று கூறினார்கள். அவர்களுக்கு பெரும் சந்தேகம் இருந்து கொண்டிருந்தது. பிறகு கவிதையிலேயே அவர்கள் கூறினார்கள்: நீண்ட காலமாக நீ அதன் மீது நிம்மதி கொண்டிருந்தாய்; நீ பழைய தண்ணீர் பையிலிருந்து சிந்தக் கூடிய ஒரு துளி நீராவாய்! என்று கூறினார்கள்.

எவ்வாறிருப்பினும், இந்த கவிதையை பாடிய பிறகு அவர்கள் தம் குதிரையை விட்டு கீழே இறங்கினார்கள். அப்போது ஹஸ்ரத் இப்னு உமர் (ரலி) அவர்கள் எலும்புடன் கூடிய ஓர் இறைச்சி துண்டை கொண்டு வந்தார்கள். இதைக் கொண்டு உமது இடுப்பை உறுதிப்படுத்துங்கள் என்று கூறினார்கள். இதை உண்பதால் கொஞ்சம் வலு கிடைக்கும் என்றார்கள். அது நெருப்பில் சுடப்பட்டிருந்தது. இந்நாட்களில் உங்களுக்கு கடுமையான சூழ்நிலைகளை எதிர்கொள்ள நேர்ந்தது என்று அவர்கள் கூறினார்கள். எலும்புடன் கூடிய அந்த இறைச்சி துண்டை அவர்கள் வாங்கிக் கொண்டு அதிலிருந்து சற்று கடித்தார்கள். அப்போது மக்கள் இருந்த திசையில் இருந்து மக்கள் மோதுகின்ற ஓசை கேட்டது. போர் ஆரம்பித்து விட்டது என்ற குரல் கேட்டது. வாள்கள் மோதிக் கொண்டிருந்தன. ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் ரவாஹா (ரலி) அவர்கள் தம் உள்ளத்தை பார்த்து, இப்போதும் கூட நீ உலகத்தில் தானே இருக்கிறாய் என்று கூறிவிட்டு அந்த இறைச்சியை எறிந்து விட்டார்கள். இப்போதும் கூட நீ இறைச்சியை உண்டு கொண்டிருக்கிறாய். மக்களோ வாளைக் கொண்டு போரிடுகிறார்கள் என்று கூறிவிட்டு உடனடியாக அந்த இறைச்சி துண்டை எறிந்து விட்டார்கள். தம் கையில் வாளேந்தியவாறு முன்னேறிச் சென்று போரிட ஆரம்பித்தார்கள். எந்த அளவுக்கென்றால், ஷஹீது ஆகிவிட்டார்கள். அவர்களின் கையில் இருந்து கொடி கீழே விழுந்தது. அப்போது முஸ்லிம்களும், இணை வைப்பாளர்களும் கலந்து போயிருந்தார்கள். சிலர் துவண்டு போய் இருந்தார்கள். அதைக் கண்ட உத்பா பின் ஆமிர் அவர்கள், என் சமுதாயமே! புறமுதுகு காட்டி போரிடுவதற்கு பதிலாக முன்னேறி சென்று போரிடுவது அதிக சிறப்பிற்குரியதாகும் என்று குரல் கொடுத்துக் கொண்டிருந்தார்கள். அவர்கள் மக்களுக்கு ஆர்வமூட்டி கொண்டிருந்தார்கள். ஓர் அறிவிப்பின் அடிப்படையில், ஹஸ்ரத் ஸைது (ரலி), ஹஸ்ரத் ஜஃபர் (ரலி) அவர்கள், மற்றும் ஹஸ்ரத் அப்துல்லாஹ் (ரலி) ஆகியோர் ஒரே கபரில் நல்லடக்கம் செய்யப்பட்டார்கள்.

ஹஸ்ரத் அபூ ஆமிர் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் ரவாஹா (ரலி) அவர்கள் ஷஹீதான போது முஸ்லிம்கள் முற்றிலும் துவண்டு போய் விட்டார்கள். அப்போது இரு நபர்கள் கூட ஒன்றாக இருப்பதை நான் பார்க்கவில்லை. முற்றிலும் சிதறுண்டு போய் இருந்தார்கள். அன்ஸாரி ஒருவர் கொடியை எடுத்தார். அவர் ஓடிவந்து மக்களுக்கு முன்னால் கொடியை நிற்க வைத்தார். மக்களே! என் பக்கம் வாருங்கள் என்று கூறினார். மக்கள் அவருக்கருகில் ஒன்று கூடினார்கள். கொடி வந்த பிறகு முஸ்லிம்களும், ஒன்று கூட ஆரம்பித்தார்கள். முஸ்லிம்களுடைய எண்ணிக்கை அதிகரித்த போது அவர் ஹஸ்ரத் காலித் பின் வலீத் (ரலி) அவர்களிடம் சென்று இதை வாங்கிக் கொள்ளுங்கள் என்று கூறினார். ஹஸ்ரத் காலித் பின் வலீத் (ரலி) அவர்கள், அவரிடம் நீங்கள் அதிக தகுதியுடையவர் என்று கூறினார்கள். அப்போது அந்த அன்ஸாரி, அல்லாஹ்வின் மீது ஆணையாக! நான் உங்களுக்காகத்தான் இதை கொண்டு வந்தேன் என்று கூறினார்.

எவ்வாறிருப்பினும், ஹஸ்ரத் காலித் பின் வலீத் (ரலி) அவர்களின் தலைமையில் இணை வைப்பாளர்களுக்கு தோல்வி கிடைத்தது பற்றியும் அல்லாஹ் தன்னுடைய தூதர் (ஸல்) அவர்களுக்கு வெற்றியைப் பற்றிய செய்தி கொடுப்பது தொடர்பாகவும் இவ்வாறு எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

ஹஸ்ரத் அபூ யுஸ்ர் அன்ஸாரி (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் ரவாஹா (ரலி) அவர்கள் ஷஹீது ஆன போது இஸ்லாத்தின் கொடியை நான் ஹஸ்ரத் ஸாபித் பின் அக்ரம் (ரலி) அவர்களிடம் கொடுத்தேன். ஹஸ்ரத் ஸாபித் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் காலித் பின் வலீத் (ரலி) அவர்களிடம் தாங்கள் போர்க் கலையின் திறமையை என்னை விட அதிகமாக அறிந்தவர் ஆவீர்கள் என்று கூறியவாறு அந்த கொடியை ஹஸ்ரத் காலித் பின் வலீத் (ரலி) அவர்களிடம் கொடுத்து விட்டார்கள். இப்னு இஸ்ஹாக் கூறுகிறார்கள்: ஹஸ்ரத் காலித் பின் வலீத் (ரலி) அவர்கள் கொடியை பிடித்த பிறகு அவர்கள் மக்களை ஒன்று கூட்டினார்கள். தம் படையை கூட்டி எதிரிகளை எதிர்ப்பதற்கான நடவடிக்கையை மேற்கொண்டார்கள். மேலும், தம் படையை ஒரு பக்கமாக கொண்டு சென்று விட்டார்கள். எதிரியும் அவர்களை விட்டு பின்வாங்கி விட்டான். அவர்கள் மக்களை காப்பாற்றி திரும்பக் கொண்டு வந்தார்கள். இப்னு இஸ்ஹாக் அவர்களைப் பொருத்த வரை விலகி வருவது என்பதே உண்மையில் ரோமானியர்களை விட்டு தப்பிப்பதாக இருந்தது. ஏனெனில் அப்போது 2000- க்கும் அதிகமான முஸ்லிம்கள் ரோமானியர்களோடு கலந்து போயிருந்தார்கள். அதாவது, முஸ்லிம்களின் மொத்த எண்ணிக்கை 3000 ஆகத்தான் இருந்தது. அதில் 2000 பேர் முற்றிலும் இரண்டறக் கலந்து போய் இருந்தார்கள்.இந்த வகையில் இந்த படையெடுப்பு, வெற்றிகரமான படையெடுப்பு என்றும் உதவி வழங்கப்பட்ட படையெடுப்பு என்றும் அழைக்கப்படுகிறது. ஏனெனில், எதிரி முஸ்லிம்களை சுற்றி வளைத்திருந்தான். எதிரிகள் முஸ்லிம்களை சுற்றி ஒன்று கூடிவிட்டார்கள். பொதுவாக இவ்வாறான சூழ்நிலையில் அனைத்து முஸ்லிம்களும் ஷஹீதாகக் கூடிய வாய்ப்பு இருந்தது. அதற்கான சாத்தியமும் இருந்தது. பெருமானார் (ஸல்) அவர்கள் கூறும்போது, எதுவரை என்றால் அல்லாஹ் உங்களுக்கு வெற்றியை வழங்குவான் என்று கூறியிருந்தார்கள். அவ்வாறு நடந்திருந்தால் அது அன்னாரின் கூற்றுக்கெதிராக இருந்திருக்கும்.

அன்னார் (ஸல்) கூறியதன் பொருள்

**திருக்குர்ஆனிலிருந்து...**

நான் ஜின்களையும், மனிதர்களையும் என்னை வணங்குவதற்காகவே படைத்துள்ளேன். (51:57)

A. Nasir Ahmad
(District Ameer, Melapalayam)

என்னவென்றால், நீங்கள் தப்பித்து விடுவீர்கள் என்பதாகும். வெற்றிக்கும் பல்வேறு அம்சங்கள் இருக்கின்றன. ஹஸ்ரத் காலிது மற்றும் அவர்களின் தோழர்கள் எதிரிகளுடன் போரிட்டார்கள். எந்த அளவுக்கு என்றால் அவர்களை தோல்வியுறச் செய்து சிதறுண்டு போக செய்து விட்டார்கள் என்று பெரும்பாலான வரலாற்று ஆசிரியர்கள் எழுதி இருக்கிறார்கள்.

ஹஸ்ரத் அபூ ஆமிர் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் கொடியை பிடித்த பிறகு எதிரி மீது தாக்குதல் நடத்தினார்கள். அல்லாஹ் எதிரியை மோசமாக தோல்வியடையச் செய்தான். இவ்வாறான தோல்வியை நான் ஒருபோதும் கண்டதில்லை. எந்த அளவுக்கென்றால் முஸ்லிம்கள் தாங்கள் விரும்பியபடி எதிரியை கொன்று குவித்தார்கள். இவ்வாறும் அறிவிப்பில் வந்துள்ளது.

இன்னோர் அறிவிப்பில், ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்களின் நுட்பமான செயலைக் குறித்தும், நுட்பமான போர் நடவடிக்கை குறித்தும் இவ்வாறு வருகிறது:

ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் முஃதாவில் மீண்டும் படையை சீரமைத்தார்கள். குதிரைப்படை வீரர்களின் ஒரு படைப்பிரிவை தேர்வு செய்தார்கள். அவர்கள் இரவோடு இரவாக ரகசியமாக தெற்கு பகுதியில் அரேபியாவின் திசையில் இஸ்லாமிய படைக்கு பின்னால் ரோமானியர்கள் பார்க்க முடியாத வகையில் ஓரிடத்தில் முகாமிட வேண்டும் என்று அவர்களுக்கு கட்டளையிட்டிருந்தார்கள். மேலும், அவர்கள் பல்வேறு குழுக்களாக இஸ்லாமிய படைக்கு பின்னால் இருந்து முஃதாவை நோக்கி வரவேண்டும் என்றும் மிகவும் உரத்த குரலில் தக்பீர் முழக்கங்களை முழங்கியவாறு வர வேண்டும் என்றும், தங்களது குதிரைகளை மணல் பகுதியில் ஓடச் செய்து புழுதியை கிளப்ப வேண்டும் என்றும் கூறியிருந்தார்கள். முஸ்லிம்களின் உதவிக்காக மேற்கொண்டு உதவிப் படைகள் வந்து கொண்டிருக்கின்றன என்று எதிரி கருத வேண்டும் என்பதே அவர்களின் நோக்கமாக இருந்தது.

ஹஸ்ரத் இப்னு உமர் (ரலி) அறிவிக்கிறார்கள்: ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் மீண்டும் புதிய வகையில் படையை சீரமைத்தவாறு படையின் முற்பகுதியை பிற்பகுதியிலும், பிற்பகுதியை முற்பகுதியிலும் அமைத்தார்கள். அதேபோன்று வலபகுதியை இடப்பக்கத்திலும், இடப்பகுதியை வலப்பக்கத்திலும் அமைத்தார்கள். முஸ்லிம்களுக்கு அநேகமாக உதவி கிடைத்து விட்டதோ என்று இதைக் கண்டு எதிரி திகைத்து விட்டான். அதாவது பல்வேறு வகையான மக்களின் முகங்களை கண்டபோது அவன் தாக்கத்திற்குள்ளாகி விட்டான். அதனால் அவர்கள் தோல்வி அடைந்து விட்டார்கள்.

ஹஸ்ரத் அனஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: ஹஸ்ரத் ஸைது (ரலி), ஹஸ்ரத் ஜஃபர் (ரலி) மற்றும் ஹஸ்ரத் இப்னு ரவாஹா (ரலி) ஆகியோர் ஷஹீதானதை குறித்து தகவல் கிடைப்பதற்கு முன்பே பெருமானார் (ஸல்) அவர்கள மக்களுக்கு அதைக் குறித்து தெரிவித்தார்கள். பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ஸைது கொடியை பிடித்தார்; அவர் ஷஹீதாகி விட்டார். பிறகு ஜஃபர் கொடியை வாங்கினார்; அவரும் ஷஹீதாகி விட்டார்; பிறகு இப்னு ரவாஹா கொடியை வாங்கினார்; அவரும் ஷஹீதாகி விட்டார். அன்னாருடைய கண்களில் இருந்து கண்ணீர் வடிந்து கொண்டிருந்தது. அன்னார் (ஸல்) கூறினார்கள்: எந்த அளவுக்கென்றால், அல்லாஹ்வின் வாள்களில் ஒரு வாள் ஆகிய ஒருவர் அந்தக் கொடியை வாங்கிக் கொண்டார். அல்லாஹ் அவர்களுக்கு வெற்றியை வாங்கினான். இது புஹாரியுடைய அறிவிப்பாகும்.

ஹஸ்ரத் அபூ கத்தாதா (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: பிறகு பெருமானார் (ஸல்) அவர்கள் தம் அருளுக்குரிய விரலை உயர்த்தியவாறு, அல்லாஹ்வே! இவர் உன்னுடைய வாள்களுள் ஒரு வாள் ஆவார். நீ இவருக்கு உதவி செய்வாயாக! என்று கூறினார்கள். அந்நாளில் இருந்து ஹஸ்ரத் காலித் பின் வலீத் (ரலி) அவர்கள் ஸைஃபுல்லாஹ் என்று அழைக்கப்பட்டார்கள். அதாவது அல்லாஹ்வுடைய வாள் என்று அழைக்கப்பட்டார்கள்.

ஓர் அறிவிப்பின் அடிப்படையில் இந்தப் போர் ஏழு நாட்கள் வரை தொடர்ந்து கொண்டிருந்தது.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்களும் இது தொடர்பாக எடுத்துரைத்துள்ளார்கள். அன்னார் (ரலி) கூறுகிறார்கள்:

கிறிஸ்தவர்களை எதிர்த்துப் போரிட புறப்பட்ட முஸ்லிம்களின் முதற்போர்ப் படையாகும் இது. இந்தப் படை சிரியாவின் எல்லைப் பகுதியை அடைந்தபோது, மன்னர் கைஸர் அங்கு வந்திருப்பதும் அவருடன் ஒரு லட்சம் ரோமானியப் போர் வீரர்களும் கிட்டத்தட்ட ஒரு லட்சம் அரபு இனக் கிறிஸ்தவப் போர் வீரர்கள் இருப்பதும் இஸ்லாமியப் படைக்குத் தெரிய வந்தது. இதனால் முஸ்லிம்கள் தாங்கள் சென்று கொண்டிருந்த வழியில் தங்கி, இந்தச் செய்திகளை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு அறிவிக்க விரும்பினார்கள். ஏனெனில் இந்தச் செய்திகள் கிடைத்ததும் அவர்கள் இன்னும் அதிகமான உதவிகளை அனுப்ப நினைத்தால் இங்கு அனுப்பி விடலாம். அல்லது ஏதாவது கட்டளையிட வேண்டியிருந்தால் அது குறித்து இங்குத் தகவல் அனுப்பலாம் என்பதற்காக அங்கு தங்க நினைத்தார்கள்.

இது குறித்து ஆலோசனை நடந்து கொண்டிருந்த போது, அப்துல்லாஹ் பின் ரவாஹா (ரலி) அவர்கள் மிகுந்த தீரத்துடன் எழுந்து நின்று மக்களே! நீங்கள் இறைவழியில் உயிர்த் தியாகம் செய்வதற்காக உங்கள் வீடுகளிலிருந்து புறப்பட்டீர்கள். நீங்கள் எதற்காகப் புறப்பட்டீர்களோ இப்பொழுது அதற்குத் தயங்குகின்றீர்கள். நாம் இதுவரை நம்முடைய எண்ணிக்கை, நம்முடைய பெரும்பான்மை, நம்முடைய வலிமை ஆகியவற்றின் காரணமாகப் பகைவர்களுடன் போர் செய்து கொண்டிருக்கவில்லையே! இறைவன் தனது அருளால் நமக்கு வழங்கிய மார்க்கத்திற்கு உதவி செய்வதற்காகவே நாம் இதுவரை பகைவர்களுடன் போர் செய்து கொண்டிருந்தோம். இப்பொழுது நம்முடைய பகைவர்கள் அதிகமாக இருந்தால், இருக்கட்டுமே!

எப்படியிருந்தபோதிலும், நமக்கு இரண்டு நன்மைகளுள் ஒன்று நிச்சயமாகக் கிடைக்கத்தான் போகிறது. ஒன்று, நாம் இந்தப் போரில் வெற்றியடைவோம் அல்லது நாம் இறைவழியில் உயிர்த் தியாகம் செய்தவர்களாவோம்! என்று கூறினார்கள்.

மக்கள் அவர்கள் கூறியதைக் கேட்டு இப்னு ரவாஹா (ரலி) அவர்கள் முற்றிலும் சரியானதை கூறியுள்ளார்கள் என்றார்கள். இதன் பிறகு உடனே படை புறப்படுமாறு கட்டளையிடப்பட்டது. முஸ்லிம்கள் முன்னேறிச் சென்றபோது ரோமானியப் படை அவர்களை நெருங்கி வந்து கொண்டிருப்பதைக் கண்டபோது, முஃதா என்னுமிடத்தில் தங்களின் படை அணிவகுப்பை அவர்கள் செய்து கொண்டனர். உடனே போர் தொடங்கிற்று. போர் தொடங்கி சிறிது நேரத்தில் முஸ்லிம்களின் தளபதியாக இருந்த ஹஸ்ரத் ஸைது பின் ஹாரிஸா (ரலி) அவர்கள் ஷஹீதானார்கள். அப்போது இஸ்லாத்தின் போர்க் கொடியை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தந்தையின் சகோதரரின் மகனாகிய ஜஃபர் பின் அபீ தாலிப் (ரலி) அவர்கள் தங்கள் கையில் எடுத்துக் கொண்டு படைக்குக் கட்டளையிடும் பொறுப்பை ஏற்றுக் கொண்டார்கள். பகைவர்களின் படை பெரும் திரளாக முன்னேறிக் கொண்டிருப்பதையும் மிகக் குறைவாக இருக்கும் முஸ்லிம்களால் அவர்களின் தாக்குதல்களைச் சமாளிக்க முடியாதென்பதையும் கண்ட முஸ்லிம் படையின் தளபதி ஜஃபர் பின் அபீ தாலிப் (ரலி) அவர்கள் குதிரையிலிருந்து கீழே குதித்து, தமது குதிரையின் கால்களைத் துண்டித்து விட்டார்கள்.

அவர்கள் இவ்வாறு செய்ததன் பொருள், யார் எதைச் செய்தாலும் நான் இந்தப் போர்க்களத்தை விட்டு வெருண்டோட மாட்டேன்; மாறாக நான் மரணத்தை விரும்புவேன். ஆனால், இங்கிருந்து வெருண்டோடுவதை விரும்பமாட்டேன் என்பதாகும். ஆள் இல்லாத குதிரைகள் இங்குமங்குமாக ஓடிச் சென்று படையில் அழிவை ஏற்படுத்தி விடக் கூடாதென்பதற்காக அரபு மக்கள் அவற்றின் கால்களை துண்டித்து விடுவது அவர்களின் பழக்கமாக இருந்தது. ஆகவே குதிரையை விட்டு இறங்குவதுடன் அதன் கால்களையும் வெட்டி விடுவார்கள். சிறிது நேரம் போர் செய்த பிறகு ஜஃபர் பின் அபீ தாலிப் (ரலி) அவர்களின் வலக்கை துண்டிக்கப்பட்டது. அப்போது அவர்கள் இடக்கையால் அந்தக் கொடியைப் பிடித்துக் கொண்டார்கள். பின்னர் அவர்களின் இடக்கையும் துண்டிக்கப்பட்டபோது, அவர்கள் தங்களுடைய இரு கைகளின் எஞ்சிய பகுதிகளால் அந்தக் கொடியை தங்கள் நெஞ்சோடு அணைத்துப் பிடித்துக் கொண்டு, அவர்கள் ஷஹீதாகும் வரை போர்க் களத்தில் நின்று கொண்டிருந்தார்கள்.

அப்போது அப்துல்லாஹ் பின் ரவாஹா (ரலி) அவர்கள், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கட்டளைக்கேற்ப, அந்தக் கொடியைப் பிடித்துக் கொண்டார்கள். இவர்களும் பகைவர்களுடன் போர் செய்து கொண்டிருக்கையில் ஷஹீதானார்கள். அந்த நேரத்தில் முஸ்லிம்கள் ஆலோசனை செய்து தங்களுள் ஒருவரைத் தங்கள் தளபதியாக நியமித்துக் கொள்வதற்குச் சிறிதும் அவகாசம் அவர்களுக்குக் கிடைக்கவில்லை. பகைவர்கள் மிக அதிகமானவர்களாக இருந்ததால் முஸ்லிம்கள் போர்க் களத்திலிருந்து பின்வாங்கி விடுவார்கள் போல் தோன்றியது. அப்போது காலித் பின் வலீது (ரலி) அவர்கள் நண்பர் ஒருவரின் வேண்டுகோளுக்கிணாங்க அந்தக் கொடியைப் பிடித்துக் கொண்டு பொழுதடையும் வரை பகைவர்களை எதிர்த்துப் போர் செய்து கொண்டிருப்பார்கள்.

மறுநாள் காலித் பின் வலீத் (ரலி) அவர்கள் களைப்படைந்தும் காயமடைந்தும், இருந்த தம் படையை அழைத்துக் கொண்டு பகைவர்களை எதிர்த்துப் போரிட ஆயத்தமானார்கள். அன்று அவர்கள்

விவேகமான ஒரு செயலைச் செய்தார்கள். அதாவது படையின் முற்பகுதியை பிற்பகுதிக்கும், பிற்பகுதியை முற்பகுதிக்கும் , வலப் பகுதியை இடப்பகுதிக்கும், இடப் பகுதியை வலப்பகுதிக்குமாக மாற்றி விட்டார்கள். அதன் பிறகு முஸ்லிம்களுக்கு மேலும் உதவிகள் கிடைத்து விட்டனவென்று பகைவர்கள் நினைக்கும் வகையில் முழக்கங்களை எழுப்பினார்கள். இதனால் அச்சமுற்ற பகைவர்கள் போர்க்களத்திலிருந்து பின்வாங்கிச் சென்று விட்டார்கள். காலித் பின் வலீத் (ரலி) அவர்கள், இஸ்லாமியப் படையைக் காப்பாற்றித் திருப்பிக் கொண்டு வந்தார்கள்.

எதிரி தானே பின்வாங்கி விட்டான். அவர்கள் பின்தொடர்ந்து வரவில்லை. எவ்வாறிருப்பினும், முஸ்லிம்களும் அவர்களைக் கண்டு அஞ்சவில்லை. மாறாக எதிரியே பின்வாங்கி விலகிச் சென்று விட்டான்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு இறைவன் வஹீ மூலம் இந்த சம்பவத்தைப் பற்றி அதே நாளில் அறிவித்து விட்டான். உடனே அவர்கள் அறிவிப்பு செய்து எல்லா முஸ்லிம்களையும் பள்ளிவாசலில் ஒன்று கூட்டினார்கள். அன்னார் சொற்பொழிவு மேடையில் ஏறிய போது, அன்னாரின் கண்களிலிருந்து கண்ணீர் வழிந்து கொண்டிருந்தது. மக்களே! இந்தப் போருக்குச் சென்ற அந்தப் படையைப் பற்றிய செய்தியை நான் உங்களுக்குக் கூறப்போகிறேன். இங்கிருந்து சென்ற அந்தப் படை பகைவர்களுடன் போர் செய்தது. போர் தொடங்கியதும் முதலில் ஸைது பின் ஹாரிஸா (ரலி) அவர்கள் ஷஹீதாகிவிட்டார்கள்; நீங்கள் அவர்களுக்காகப் பிரார்த்தனை செய்யுங்கள்.

பிறகு போர்க் கொடியை ஜஃபர் (ரலி) அவர்கள் எடுத்துக் கொண்டு பகைவர்களைத் தாக்கினார்கள். அவர்களும் ஷஹீதாகி விட்டார்கள்;நீங்கள் அவர்களுக்காகவும் பிரார்த்தனை செய்யுங்கள்.

இதன் பிறகு அந்தக் கொடியை எடுத்துக் கொண்ட அப்துல்லாஹ் பின் ரவாஹா (ரலி) அவர்கள் படையை மிகுந்த வீரத்துடன் போரிடச் செய்தார்கள்; ஆனால் இறுதியில் அவர்களும் ஷஹீதாகி விட்டார்கள்; நீங்கள் அவர்களுக்காகவும் பிரார்த்தனை செய்யுங்கள்.

அடுத்து அந்தக் கொடியை காலித் பின் வலீத் (ரலி) அவர்கள் எடுத்துக் கொண்டார்கள். நான் அவர்களைத் தளபதியாக நியமிக்கவில்லையென்றாலும் அவர்கள் தாமாகவே தம்மைத் தாமே தளபதியாக நியமித்துக் கொண்டார்கள். ஆனால், அவர்கள் அல்லாஹ்வின் வாள்களுள் ஒரு வாள் ஆவார்கள். எனவே இறை உதவியால் அவர்கள் இஸ்லாமியப் படையைப் பாதுகாப்பாக திருப்பிக் கொண்டு வந்தார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் இந்த சொற்பொழிவின் காரணமாக காலித் அவர்களின் பெயர் முஸ்லிம்களுக்கிடையே ஸைஃபுல்லாஹ் (அல்லாஹ்வின் வாள்) என்று பிரபல்யமடைந்தது.

காலிது அவர்கள் பின்னாளில் நம்பிக்கைக் கொண்டவர்களைச் சார்ந்தவராக இருந்ததால், அவர்களைக் குறித்துச் சில நபித்தோழர்கள் கிண்டலாகவோ அல்லது ஏதாவது சண்டை சச்சரவின் போதோ நீங்கள் எங்களுக்குப் பிறகு நம்பிக்கைக் கொண்டவர்கள்தாமே! என்று கூறிக் கொண்டிருந்தனர்.

ஒரு தடவை அவர்களுக்கும் ஹஸ்ரத் அப்துர்ரஹ்மான் பின் அவ்ஃப் (ரலி) அவர்களுக்குமிடையில் இதுபோன்ற ஒரு விஷயத்தில் தகராறு ஏற்பட்டது. ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் (ரலி) அவர்கள், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் ஹஸ்ரத் காலித் பின் வலீத் (ரலி) அவர்களைக் குறித்து முறையீடு செய்தார்கள். அப்போது, காலிதே! பத்ருப் போர் நடந்த காலத்திலிருந்து இஸ்லாத்திற்கு தொண்டு செய்பவரை நீங்கள் ஏன் துன்புறுத்துகிறீர்கள்?; நீங்கள் இஸ்லாத்திற்காக உஹது மலையளவு தங்கத்தை செலவு செய்தாலும் கூட இறைவனிடமிருந்து அவருக்குச் சமமான வெகுமதிகளை உங்களால் பெற முடியாது என்று அன்னார் (ஸல்) கூறினார்கள்.

இதற்கு காலித் (ரலி) அவர்கள், அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே, இவர்கள் என்னைப் பழித்துப் பேசுகிறார்கள். இதனாலும் நானும் பதில் கொடுக்கிறேன் என்றார்கள். மக்களே நீங்கள் காலிதை துன்புறுத்தாதீர்கள் என்று அன்னார் (ஸல்) கூறினார்கள்.

அன்னார் (ஸல்) காலித் (ரலி) அவர்களுக்கும் ஆறுதல் நல்கினார்கள்.

காலித் அல்லாஹ்வின் வாள்களுள் ஒரு வாள் ஆவார்கள்; இறைவன் இந்த வாளை நிராகரிப்பாளர்களின் வீழ்ச்சிக்காக வழங்கியிருக்கின்றான் என்றார்கள். இந்த முன்னறிவிப்பு சில ஆண்டுகளுக்குப் பிறகு சொல்லுக்குச் சொல் அப்படியே நிறைவேறியது. காலித் (ரலி) அவர்கள் தம் படையைத் திருப்பிக் கொண்டு வந்தபோது, அந்தப் படையுடன் செல்லாத மதீனாவிலுள்ள நபித்தோழர்கள் அந்தப் படை வீரர்களைப் பார்த்துத் தப்பி ஓடிவந்தவர்கள் என்று கூறிக் கொண்டிருந்தார்கள்.

அதாவது நீங்கள் அங்கேயே போரிட்டு இறந்திருக்க வேண்டும்; திரும்பி வந்திருக்கக் கூடாது என்றார்கள்.

ஆனால், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், இவர்கள் தப்பி ஓடி வந்தவர்கள் அல்ல ; மீண்டும், மீண்டும் சென்று பகைவர்களைத் தாக்கும் வீரர்களாவார்கள் என்று கூறினார்கள். இவ்வாறு கூறி ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், வருங்காலத்தில் முஸ்லிம்களுக்கும் சிரியா நாட்டு மக்களுக்கும் இடையில் நிகழவிருந்த போர்களைப் பற்றி முன்னறிவிப்புச் செய்தார்கள். பிறகு காலித் பின் வலீத் (ரலி) அவர்களும் தம் திறமையை வெளிப்படுத்தினார்கள். (தீபாச்சா தஃப்ஸீருல் குர்ஆன், அன்வாருல் உலூம் பாகம் 20, பக்கம் 334- 336)

கொடியின் கண்ணியம் மற்றும் மதிப்பை குறித்து எடுத்துரைத்தவாறு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் ஒரு சந்தர்ப்பத்தில் இவ்வாறு கூறுகிறார்கள்: சமுதாயங்களில் கொடிக்கு மிகப் பெரும் கண்ணியமும், மரியாதையும் கொடுக்கப்படுகின்றது. சில சமயங்களில் எதிரியிடமிருந்து அவனுடைய கொடியை பிடுங்குவதற்கு பெரும் பெரும் தியாகங்கள் செய்ய வேண்டியது வருகிறது. சில சமயங்களில் தமது கொடியை காப்பாற்றுவதற்காக பெரும் பெரும் தியாகங்களை செய்ய வேண்டியது வருகிறது. இது ஷிர்க் ஒன்றும் கிடையாது. தந்தைக்கு முன்னால் அவருடைய மகன் உயர்ந்த இடத்தில் அமர்வதை அனைத்து மக்களும் பொருத்தமற்றதாக கருதுகிறார்கள். ஏனெனில், உவமை ரீதியாக அது தந்தையை அவமதிக்கும் செயலாக கருதப்படுகின்றது. அதே போன்று, சமுதாயத்தின் கொடியை பறிப்பதன் பொருள் உவமை ரீதியாக அதனுடைய கண்ணியத்தையும், கற்பையும் மண்ணோடு மண்ணாக கலப்பதாகும். ஆகவே சமுதாயங்கள் தம் உயிரை தியாகம் செய்வதற்கு கூட தயக்கம் காட்டுவதில்லை. ஆனால் அவர்களின் கொடி எதிரியின் கைவசம் செல்வதை ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். ஆகவேதான் அஹ்மதிய்யத்தின் கொடி போன்றவற்றிலும், குத்தாமுல் அஹ்மதிய்யாவும் தம் கொடிகளை பாதுகாப்பதற்காக நிபந்தனைகள் வகுக்கப்பட்டுள்ளன. அவற்றை பாதுகாப்பதற்காக குத்தாம் நியமிக்கப்படுகின்றனர்.

எவ்வாறிருப்பினும், அன்னார் (ரலி) எழுதுகிறார்கள்: ஒரு சமுதாயத்தின் மக்களுடைய உள்ளங்களில் அந்த சமுதாயத்தின் கொடியின் கண்ணியம் நிலைநாட்டப்பட்டு விடும்போது, கொடியை பாதுகாப்பதற்காக அவர்கள் தம் உயிர்களை தியாகம் செய்ய நேர்ந்தாலும் எவ்வித தயக்கமும் இன்றி உயிரை தியாகம் செய்வதற்கு அவர்களை அது ஆயத்தப்படுத்தி விடுகின்றது. ஏனெனில், அப்போது ஒரு சிறிய மரத்துண்டு அல்லது சிறிய துணியை பற்றிய கேள்வி இல்லை. மாறாக உவமை மொழியில் ஒரு கொடியின் தோற்றத்தில் அவர்களுக்கு முன்னால் இருக்கின்ற சமுதாய கண்ணியத்தைப் பற்றிய கேள்வியாக இருக்கின்றது.

அன்னார் (ரலி) எழுதுகிறார்கள்:

நான் முன்பும் பலமுறை இதைக் குறித்து எடுத்துரைத்துள்ளேன். ஸஹாபிகளிடத்தில் இவ்வாறான முன்மாதிரிகள் நமக்கு காணக் கிடைக்கின்றன. ஒரு போரில் ஒரு முஸ்லிம் தளபதியிடம் இஸ்லாமிய கொடி இருந்தது. அவர்கள் பிரம்மாண்டமான முறையில் கொடிகளை உருவாக்குவது கிடையாது. மாறாக ஒரு சாதாரண கம்பில் கருப்பு துணியை கட்டி விடுவார்கள். அது சாதாரண கருப்பு துணியாக இருக்கலாம் ; அது சாதாரண கம்பாக இருக்கலாம். ஆனால் அப்போது சமுதாயத்தின் கண்ணியம் பற்றிய கேள்வி மட்டுமே முன்னால் இருக்கும். அந்த கொடி எந்த அளவு விலையுயர்ந்த கொடி என்றோ? அல்லது அது சாதாரணக் கொடி என்றோ அப்போது பார்க்கப்படுவதில்லை. மாறாக சமுதாயத்தின் கண்ணியத்திற்காக அங்கு அந்த கொடி பாதுகாக்கப்பட வேண்டும் என்பதே கருத்தில் கொள்ளப்படுகிறது. எவ்வாறிருப்பினும், கிறிஸ்தவர்களுக்கு எதிராக அங்கு போர் செய்யப்பட்டு கொண்டிருந்தது. முஸ்லிம்களின் கொடி இருந்த பகுதியில் குறிப்பாக தாக்குதல் நடத்தப்பட்டது. ஹஸ்ரத் ஜஃபர் (ரலி) அவர்களிடம் அந்த கொடி இருந்தது. அது முஃதா எனும் போராகும். எதிரிகள் தாக்குதல் நடத்திய போது ஹஸ்ரத் ஜஃபர் (ரலி)

**நபிமொழியிலிருந்து...**

சொர்க்கத்தின் வாசல்களில் ஒரு வாசலின் பெயர் தர்மத்தின் வாசல் ஆகும். தான, தர்மங்கள் செய்யக்கூடியவர்கள் அதன் வழியாக நுழைவர். (முஸ்லிம்)

S.S.H. Muhammed Lebbai
(Ameer, Melapalayam)

அவர்களின் ஒரு கை வெட்டப்பட்டு விழுந்தது. அன்னார் உடனடியாக அந்த கொடியை இன்னொரு கையில் பிடித்துக் கொண்டார்கள். அப்போதும் கொடி கீழே விழாததை எதிரி கண்டபோது, அவன் மறுபுறம் தாக்குதல் நடத்தினான். அதன் விளைவாக கொடியை பிடித்திருந்த அவர்களின் மற்றொரு கையும் வெட்டப்பட்டது. ஹஸ்ரத் ஜஃபர் (ரலி) அவர்கள் உடனடியாக கொடியை தம் இரு கால்களாலும் பிடித்துக் கொண்டார்கள். இவ்வாறு அறிவிப்பில் வருகிறது: கால்களால் நீண்ட நேரம் கொடியை பிடிக்க முடியாது. ஆகவே அவர்கள் உரத்த குரலில், யாராவது ஒரு முஸ்லிம் முன்னால் வந்து இந்த கொடியை பிடித்துக் கொள்ளட்டும்! என்று அழைத்தார்கள். முஸ்லிம்களே! இஸ்லாத்தின் கொடி தாழ்ந்து விடக் கூடாது என்று அவர்கள் கூறினார்கள். அதுவோ துணியால் ஆன, சாதாரண மரக்கம்பையுடைய கொடியாக இருந்தது. ஆனால், இஸ்லாத்தின் கொடி என்று அதற்கு பெயர் வைக்கப்பட்டிருந்தது. எவ்வாறிருப்பினும், அது இஸ்லாத்தின் கொடியாக இருந்தது. ஆகவே அதை பாதுகாப்பது அவசியமாக இருந்தது. ஆகவே இன்னொரு முஸ்லிம் முன்னால் சென்று அந்த கொடியை பிடித்துக் கொண்டார். அவர் மற்றொரு ஸஹாபியாக இருந்தார். பிறகு அவர் அந்தக் கொடியை காலித் பின் வலீத் (ரலி) அவர்களிடம் கொடுத்தார்.

பாருங்கள்! அது ஒரு சாதாரண துணியாகும்; சாதாரண மரத்துண்டு ஆகும். இஸ்லாத்தைப் பொருத்தவரை அந்த துணிக்கோ அல்லது மரத்துண்டுக்கோ எந்த முக்கியத்துவமும் கிடையாது. ஆனால் சமுதாயத்தின் கண்ணியத்தை பற்றிய கேள்வி எழும் என்றால், இஸ்லாம் அதை விட்டு தடுப்பதும் கிடையாது. அந்த தளபதி கூறினார்:

இது இஸ்லாத்தின் கொடியாகும்; இதை கீழே விழ விட்டுவிடக் கூடாது என்றார். அவர் கூறிய விஷயத்தை பெருமானார் (ஸல்) அவர்களும் விரும்பத்தகாததாக கருதவில்லை. மாறாக சில சமயங்களில் பெருமானார் (ஸல்) அவர்களே இவ்வாறான பொருட்களின் கண்ணியத்தை நிலைநாட்டுவதற்காக, இந்த கொடியை யார் வாங்குவார்கள்? என்று கேட்டிருக்கின்றார்கள். சில போர்களில் அன்னார் (ஸல்) ஸஹாபிகளை பார்த்து, எவர் இந்த கொடிக்கு கண்ணியம் வழங்குவாரோ அவருக்கு நான் இந்த கொடியை வழங்குவேன் என்று கூறுவார்கள். ஸஹாபிகள் ஒருவரை ஒருவர் முந்திக் கொண்டு அந்த கொடியை வாங்குவதற்கு முயற்சி செய்து வந்தார்கள். (குத்பா பேருரை, அக்டோபர் 23, 1942, குத்பாத்தே மஹ்மூத்,பாகம் 23, பக்கம் 471 - 473)

எவ்வாறிருப்பினும், இந்த குறிப்பு இனிமேலும் தொடரும். உலகின் பொதுவான சூழ்நிலைகளுக்காக துஆக்களை தொடர்ந்து செய்து வாருங்கள் என்று நான் கூறிவருகிறேன்.குறிப்பாக தற்காலத்தில் பாகிஸ்தான் மற்றும் இந்தியாவுடைய சூழ்நிலைகளுக்காக துஆ செய்யுங்கள். அல்லாஹ் அநீதியை முடிவுக்கு கொண்டு வருவானாக! அநீதி இழைக்கப்பட்டவர்களை பாதுகாப்பானாக! அரசாங்கங்களுக்கும் அறிவை வழங்குவானாக! போர்களை நோக்கி முன்னேறுவதற்கு பதிலாக சமாதானம் மற்றும் சமரசம் ஆகியவற்றால் விவகாரத்தை தீர்ப்பார்களாக! சர்வதேச ஒப்பந்தங்களை பேணக் கூடியவர்களாக இருப்பார்களாக!

சர்வதேச அமைப்புகள் சார்பாகவும் தற்போது நீதி என்பது அரிதாகவே கிடைக்கின்றது. அந்த அமைப்புகளுக்கும் அல்லாஹ் நல்வாய்ப்பை வழங்குவானாக! பரஸ்பரம் இந்த நாடுகளில் விவகாரத்தை தீர்த்துக் கொள்ளும் வகையில் இரு தரப்பிலும் உள்ள அனுதாபம் கொள்ளக் கூடிய அன்பர்களுக்கும் அல்லாஹ் நல்வாய்ப்பை வழங்குவானாக!

பாகிஸ்தான் தரப்பிலிருந்து கூறப்படுவது என்னவென்றால், காஷ்மீரில் நிகழ்ந்த பயங்கரவாத சம்பவத்திற்கும் தங்களுக்கும் எந்த தொடர்பும் கிடையாது; உங்களுக்கு சந்தேகம் இருக்குமென்றால், ஐநா அமைப்பின் துறைகள் மூலமாக இதை ஆய்வு செய்து பாருங்கள்; நாம் போரிடுவதற்கு பதிலாக இதை செய்ய வேண்டும் என்று பாகிஸ்தானுடைய அமைச்சர்கள் சார்பாக பெரும்பாலும் அறிக்கைகள் வந்து கொண்டிருக்கின்றன.


இந்திய அரசாங்கமும் இதற்கு நேர்மறையான நடவடிக்கையை வெளிப்படுத்த வேண்டும். அல்லாஹ் இரு தரப்பிற்கும் அறிவை வழங்குவானாக! போர் நிகழும் என்றால் இரண்டு பக்கமும் நஷ்டம் ஏற்படும். போர் வீரர்கள் மட்டுமின்றி பொதுமக்களும் அநீதிக்குள்ளானவர்களும் காரணம் இன்றி கொல்லப்படுவார்கள். இதைத்தான் நாம் தற்காலத்தில் போர்களில் பார்த்து வருகிறோம். இதுதான் நிகழ்கிறது.

எவ்வாறிருப்பினும், உலகில் உள்ள அநீதிகுள்ளான அனைவருக்காவும் துஆ செய்யுங்கள்; வெளிப்படையில் அழிவின் விளிம்பில் உலகம் நிற்கிறது. அல்லாஹ்தான் அதை அழிவிலிருந்து காப்பாற்ற முடியும். மக்கள் இறைவன் பக்கம் குனியக் கூடியவர்களாக ஆகும்போதுதான் இது சாத்தியமாகும். அல்லாஹ் அவர்களுக்கு (இதற்கான) நல்வாய்ப்பை வழங்குவானாக! நமக்கும் துஆக்களுக்கான நல்வாய்ப்பை வழங்குவானாக!

இப்பொழுது நான் ஜூமுஆவுக்கு பிறகு ஒரு ஷஹீதுடைய ஜனாஸா தொழுகையை தொழ வைப்பேன். ரஃபீக் அஹ்மது ஸாஹிபின் மகனாகிய முஹம்மது ஆஸிஃப் ஸாஹிப், கஸூர் எனும் மாவட்டத்தில் புலைர் (bhulair) எனும் ஊரைச் சார்ந்தவர் ஆவார். அஹ்மதிய்யத்தின் எதிரிகள் ஏப்ரல் 24 ஆம் தேதியன்று துப்பாக்கிச்சூடு நடத்தி இவர்களை ஷஹீதாக்கி உள்ளார்கள். إِنَّا لِلّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُوْنَ

ஷஹாதத்தின்போது மர்ஹூமுடைய வயது 19 ஆகும். இளைஞராக இருந்தார். விபரத்தின் அடிப்படையில், சம்பவம் நிகழ்ந்த நாளன்று இரவு ஏறக்குறைய 10.45 மணிக்கு முஹம்மது ஆஸிஃப் ஸாஹிப் அவர்கள் பக்கத்து வீட்டைச் சார்ந்த அஸ்நான் அஹ்மது எனும் அஹ்மதி அன்பருடன் மோட்டார் சைக்கிளில் ஊருக்கு வெளியே உள்ள ஒரு கடையில் சில வீட்டுப் பொருட்களை வாங்குவதற்காக சென்றிருந்தார். ஊரில் உள்ள கடைக்காரர்கள் Boycott செய்திருந்தார்கள். ஆகவே பொருட்களை வாங்குவதற்கு வெளியே செல்ல வேண்டிய நிலை இருந்தது. வீட்டிலிருந்து சுமார் 100 மீட்டர் தொலைவில் வழியில் அஹ்மதிய்யத்தின் எதிரிகள் சந்தர்ப்பத்திற்காக ஏற்கனவே காத்திருந்தனர். அவர்கள் இவ்விருவர் மீதும் துப்பாக்கிச்சூடு நடத்தி இருக்கின்றார்கள். முஹம்மது ஆஸிஃப் ஸாஹிப் அவர்களின் வலது தோளின் பக்கம் இடுப்புப் பகுதியில் குண்டு துளைத்து மறுபுறம் சென்று விட்டது. மற்றொரு காதிம் ஆன அஸ்னான் அஹ்மதுக்கு இடது காலில் குண்டடி பட்டுள்ளது. தாக்குதல் நடத்தியவர்கள் அந்த சம்பவத்திற்கு பிறகும் அச்சத்தை ஏற்படுத்துவதற்காக சுட்டுக் கொண்டே இருந்தார்கள்.நம்முடைய அந்த இரு காதிம்களும் காயமடைந்திருந்த நிலையிலும் துணிவுடன் செயல்பட்டவாறு மோட்டார் சைக்கிளை ஓட்டியவாறே அங்கிருந்து வெளியேறி இருக்கிறார்கள். கொஞ்ச தூரம் சென்ற பிறகு அவர்கள் விழுந்து விட்டார்கள். சம்பவ இடத்திற்கு போலீஸ் தாமதமாக வந்து சேர்ந்துள்ளது. அந்த இடைப்பட்ட நேரத்தில் தாக்குதல் நடத்தியவர்கள் சார்பாக தொடர்ச்சியாக துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டுக் கொண்டிருந்தது. அதன் காரணமாக அந்த இருவரையும் உடனடியாக மருத்துவமனைக்கு கொண்டு செல்ல முடியவில்லை. போலீஸ் வந்தடைந்த பிறகு ஆஸிஃப் ஸாஹிப் அவர்கள் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டார்கள். ஆயினும் இரத்தம் அதிகமாக வெளியேறியதன் காரணமாக முஹம்மது ஆஸிஃப் ஸாஹிப் அவர்கள் மருத்துவமனை சென்றடைந்த உடனே ஷஹீதாகி விட்டார்கள். إِنَّا لِلّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُوْنَ

இந்த சம்பவம் தொடர்பாக கஸூர் மாவட்டத்தில் ஃபூல் நகர் போலீஸ் ஸ்டேஷனில் வழக்கு பதியப்பட்டுள்ளது. வழக்கு பதியப்பட்டாலும் சூழ்நிலைகள் அதேபோன்றுதான் இருக்கின்றன. அவர்கள் ஒன்றும் செய்வது கிடையாது. என்ன நடவடிக்கை எடுக்கிறார்கள்? என்று பார்ப்போம். மூன்று பேரை அவர்கள் கைது செய்து இருக்கிறார்கள். காலில் குண்டடிப்பட்ட அஸ்நான் அஹ்மது ஸாஹிப் முதற்கட்ட மருத்துவ உதவிக்கு பிறகு அல்லாஹ்வின் அருளால் நலமாக இருக்கிறார். கஸூர் மாவட்டத்தில் புலைர் பகுதியில் கடந்த மூன்று வருடங்களாக கடுமையான எதிர்ப்பு நிலவி வருகிறது. பலமுறை ஜமாஅத்தினர்களுக்கு எதிராக ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் வழக்குகள் தொடரப்பட்டுள்ளன. பலமுறை அஹ்மதிகள் தாக்குதலுக்கு இரையாகி இருக்கின்றார்கள். அஹ்மதிய்யா கபருஸ்தானில் புனித கலிமா மற்றும் இதர வசனங்கள் அழிக்கப்பட்டுள்ளன. அந்த ஊரில் முழுமையான சமூகப் புறக்கணிப்பிற்கான நிலை உள்ளது.கடைகளில் இருந்து பொருட்களை வாங்குவதற்கு கட்டுப்பாடுகள் இருப்பது மட்டுமின்றி ஊரில் உள்ள பொது வடிகால் குடிநீர் நிலையத்தில் இருந்து தண்ணீர் எடுப்பதற்கு அனுமதி கிடையாது. பிள்ளைகள் கல்விக் கூடங்களுக்கு சென்று வரும் போதும் தொந்தரவுக்கு ஆளாகிறார்கள். இந்த நிலைதான் அங்கு காணப்படுகிறது. ஷஹீது மர்ஹூமுடைய குடும்பத்தில் அவர்களின் முப்பாட்டனார் மதிப்பிற்குரிய முஹம்மது தீன் ஸாஹிப் மூலமாக அஹ்மதிய்யத் வந்தது. அவர்கள் 1934 இல்

Proprietor off : 044- 2260 1886
RAZIK XEROX & TELECOM
AUTHORISED AIR, BUS, RAIL BOOKING CENTRE
AO MULTI COLOUR PLAN XEROX

➢ PASSPORT, VISA,MONEY TRANSFER, PANCARD,
➢ LAMINATION, SPIRAL BINDING, PRINT OUT,
➢ SCANNING, RECHARGE, COLOUR XEROX,
➢ ALL VEHICLE INSURANCE, COURIER
NO:1,V.V COLONY, 1ST STREET,
ADAMBAKKAM, CHENNAI-600 088
E-MAIL: razikxerox@gmail.com

இரண்டாவது கிலாஃபத்துடைய அருளுக்குரிய காலகட்டத்தில் காதியான் சென்று ஆண்டு மாநாட்டின் சந்தர்ப்பத்தில் பைஅத் செய்தார்கள். மர்ஹூமுடைய பாட்டனார் பெயர் முஹம்மது யஃகூப் ஸாஹிப் ஆகும்.

ஷஹீது மர்ஹூம் அவர்கள் தம் பெற்றோர்களுக்கு ஒரே மகன் ஆவார். குறைவாக பேசக் கூடியவரும், அதிக துணிவுள்ளவரும் ஆவார். எல்லாருடனும் அன்பு மற்றும் அனுதாபத்தின் தொடர்பு இருந்தது. ஐவேளை தொழுகையை பேணி வந்தார். ஜமாஅத்தின் தொண்டுகளுக்கு எப்போதும் ஆயத்தமாக இருந்தார்கள். ஜமாஅத் அமைப்பின் கீழ் நடத்தப்படுகின்ற விளையாட்டுப் போட்டிகளில் பங்கெடுக்கக் கூடிய ஆர்வம் அதிகமாக இருந்தது. சில நாட்களுக்கு முன்பு அந்த மாவட்டத்தில் நடந்த போட்டிகளில் பங்கேற்று முதல் இடத்தை பெற்றிருந்தார்கள். ஷஹீதுடைய தாயார் இதய நோயாளி ஆவார். ஷஹீது மர்ஹூம் அவர்கள் தம் தாயை முழுமையாக கவனித்து வந்தார்கள். தாயார் கூறுகிறார்: மர்ஹூம் அவர்கள் மிகவும் கட்டுப்படக் கூடிய பிள்ளையாக இருந்தார். எனக்கு ஒருபோதும் கட்டுப்படாமல் இருந்தது கிடையாது. உறவினர்கள், அன்பர்கள் ஆகியோரை நேசிக்கக் கூடியவராக இருந்தார்.

ஷஹீது மர்ஹூமுடைய சகோதரி ஸாஹிதா ரஃபீக் கூறுகிறார்: என்னுடைய சகோதரர் ஒவ்வொருவரையும் கருத்தில் கொள்வார். மிகவும் நேசிக்கக் கூடிய, அனுதாபம் காட்டக் கூடிய சகோதரராக இருந்தார். அவருக்கும் ஷஹாதத்துக்கான ஆர்வம் இருந்தது. அல்லாஹ் அதை நிறைவேற்றி விட்டான்.

ஷஹாதத்திற்கு மூன்று நாட்கள் முன்பு தம் சகோதரனுக்கு குண்டடிப்பட்டதாக அவர் கனவு கண்டார். அடுத்த நாளே ஃபோன் செய்து நலம் விசாரித்தார். ஷஹாதத் நாள் அன்றும் நலம் விசாரித்தார். அவர் கூறுகிறார்:

வேலையில் மும்முரமாக இருக்கிறேன் என்று அவர் கூறினார். எனவே முழுமையாக பேச இயலவில்லை. அவர் அந்த நாளில் தான் ஷஹீது ஆனார்; அல்லாஹ்வுக்கு முன் ஆஜராகிவிட்டார். சகோதரி கூறுகிறார்: கனவின் காரணமாக சகோதரரைக் குறித்து மிகவும் கவலைக்கு உள்ளாகி இருந்தேன். துஆவுக்காக தங்களுக்கு கடிதம் எழுதும்போது, குண்டடிப்பட்டதாக கனவு கண்டேன் என்ற வாக்கியத்தை எழுதும் போதுதான் சகோதரர் ஷஹீது ஆகிவிட்டார் என்ற செய்தி எனக்கு கிடைத்தது.

ஷஹாதத்தின்போது ஷஹீது மர்ஹூம் அவர்கள் கஸூர் மாவட்டத்தின் குத்தாமுல் அஹ்மதிய்யாவுடைய செயற்குழுவிலும் இருந்தார். நாஸிம் தஹ்ரீக்கே ஜதீத் ஆக இருந்தார். உள்ளூர் ஜமாஅத்தில் துணை காயித் ஆகவும், நாஸிம் அத்ஃபால் ஆகவும் தொண்டாற்றக் கூடிய நல்வாய்ப்பை பெற்றுக் கொண்டிருந்தார்கள். பின்விட்டு சென்றவர்களுடன் பெற்றோர்கள் மற்றும் இரு சகோதரிகள் உள்ளனர்.

புலைர் உடைய சத்ர் ஜமாத் நிஸார் அஹ்மது ஸாஹிப் கூறுகிறார்:

ஷஹீது மர்ஹூம் அவர்கள் மேலான நற்பண்புகளுக்கு சொந்தக்காரராக இருந்தார். மிகவும் இனியவராவார். நல்லொழுக்கமுடையவராகவும், அமைதியானவராகவும், கிலாஃபத்தை நேசிக்கக் கூடியவராகவும், கட்டுப்படக் கூடிய ஜமாஅத் தொண்டராகவும் நான் அவரை கண்டுள்ளேன். தொழுகைகளிலும் சந்தாக்களிலும் முறையானவராக இருந்தார். வக்காரே அமல், கித்மத்தே கல்க் மற்றும் பாதுகாப்பு பணிகள் போன்ற அனைத்து துறைகளிலும் முன்னுதாரண பணியை செய்யக் கூடியவர்களாகவும், ஜமாஅத் வேலைகளிலும் முந்திக் கொண்டு பங்கு பெறக் கூடியவராகவும் இருந்தார். பெற்றோருக்கு தொண்டு செய்யக் கூடியவராகவும், எல்லா விதத்திலும் அவர்களை கவனித்துக் கொள்ளக் கூடியவராகவும் இருந்தார்.

முஅல்லிம் தாரிக் அஹ்மத் ஸாஹிப் கூறுகிறார்: ஷஹீது மர்ஹூம் அவர்கள் மேலான சிறப்பம்சங்களுக்கு சொந்தக்காரராக இருந்தார். அவருடைய வீட்டில் டிவி கிடையாது. ஆனால் ஜுமுஆ குத்பாவை முறையாக தமது ஃபோனில் கேட்டு வந்தார் அல்லது குத்பா கேட்பதற்காக மிஷன் ஹவுஸுக்கு என் வீட்டிற்கு வந்து விடுவார். ஜமாஅத் வேலைக்காக எப்போது அழைக்கப்பட்டாலும் உடனடியாக ஆஜராகி விடுவார். ஒவ்வொரு வேலையையும் மிகவும் பொறுப்புடன் செய்வார். ஜமாஅத்தின் விருந்தினர்களுக்கு மிக ஆர்வத்துடன் தொண்டு செய்து வந்தார்.

அல்லாஹ் பாவமன்னிப்பு மற்றும் கருணையுடன் நடந்து கொள்வானாக! அந்தஸ்துகளை உயர்த்துவானாக! பின்விட்டுச் சென்றவர்களுக்கும் பொறுமை மற்றும் துணிவை வழங்குவானாக!

பாகிஸ்தானில் இவவாறு பயங்கரவாதம் செய்யக் கூடியவர்களுக்கும் ஜமாஅத்தை எதிர்க்கக் கூடியவர்களுக்கும் தைரியம் அதிகரித்துக் கொண்டே செல்கிறது. அல்லாஹ் விரைவில் அவர்களை பிடிப்பதற்கான ஏற்பாட்டை செய்வானாக!

தமிழாக்கம்
மவ்லவி தாரிக் அஹ்மது

* * * * * *

12- ம் பக்கத் தொடர்ச்சி...
பொருள் தியாகம்.....(காதியான் ஜல்ஸா சொற்பொழிவு)

அமைப்பாகும். மேலும் இப்பொழுது ஐந்தாயிரம் ஷேஃபாவையே சந்தாவாக கொடுப்பேன். என்று கூறினார்.

எனவே அவர் ஐந்தாயிரம் ஷேஃபா தொகையை சந்தாவாக கொடுத்தார். அல்லாஹ்வுடைய அருளினால் புதிய அஹ்மதி பொருள் தியாகத்தில் முன்னேறிக் கொண்டிருக்கின்றார்கள்.

ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் நவம்பர் 6, 2011 அன்று ஐவேரிகோஸ்ட்டைச் சேர்ந்த ஒரு புதிய அஹ்மதியின் ஈமானை வலுவூட்டக்கூடிய ஒரு சம்பவத்தை பற்றி கூறினார்கள்.

ஐவேரிகோஸ்ட் முபல்லிஃக் ஸாஹிப் எழுதுகின்றார்: நம்முடைய நண்பர் Alido Oudraga என்ற நண்பர் 2009-ம் ஆண்டின் இறுதியில் பைஅத் செய்தார். பைஅத் செய்த முதல் நாளிலேயே தம்முடைய வருமானத்தை கணக்கிட்டவாறு சரியான வருமானத்திற்கு ஏற்றவாறு தொடர்ச்சியாக சந்தா செலுத்தி வந்தார். இந்தக் காலகட்டத்தில் அவர் சந்தாவின் எண்ணிலடங்கா அருட்களை கண்டார். ஒருநாள் ஜமாஅத்தின் பழைய உறுப்பினர்களுடன் இந்த அருள்கள் தொடர்பாக பேசிக் கொண்டிருந்தார். அந்த பழைய உறுப்பினரில் ஒருவர் 2004-ம் ஆண்டு பைஅத் செய்தவராவார். அந்த விஷயங்களை கேட்ட உடன் அவர் தன்னுடைய 2000 பிராஃங் சந்தாவை அதிகப்படுத்தி 5000 ஃபிராங் ஷேஃபா ஆக்குவதாக வாக்குறதி கொடுத்தார்.

கூறுகின்றார்கள்: இப்பொழுது சந்தா செலுத்த கூட ஆரம்பிக்கவில்லை. அவர் தன்னுடைய வருமானத்தில் அசாதாரண முன்னேற்றத்தைக் கண்டார். எனவே அந்த பழைய உறுப்பினர் என்னிடம் வந்தார். முழு சம்பவத்தையும் கூறினார். மேலும் கூறுகின்றார்கள்: நான் ஐந்தாயிரம் ஷேஃபா தொகையை சந்தாவிற்கான வாக்குறுதி வழங்கினேன். ஆனால், இன்றிலிருந்து நான் ஐந்தாயிரத்திற்கு பதிலாக பத்தாயிரம் ஃபிராங்க் ஷேஃபா மாதாந்திரம் கொடுப்பேன். மேலும் அதற்கு ஏற்றவாறு சந்தா கொடுக்கவும் அவர் ஆரம்பித்து விட்டார். இவ்வாறு பல உறுப்பினர்கள் இருக்கின்றார்கள். அவர்கள் சந்தாவில் முன்னேறி கொண்டிருக்கின்றார்கள்.

நவம்பர் 9, 2012 அன்று ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறுகின்றார்கள்:

கிர்கிஸ்தானில் உள்ள நம்முடைய முபல்லிஃக் எழுதுகின்றார்கள். ஒரு கரக்கி நண்பர் மார்ட் ஸாஹிப் 2006 இல் பைஅத் செய்தார்கள். மிகவும் நல்ல இயல்பு கொண்ட இளைஞர் ஆவார்கள். பைஅத் செய்த உடனேயே நம்முடைய முபல்லிஃக் அவர்கள், "சந்தா தொடர்பாக மற்ற மக்கள் தங்களுடைய ஜமாஅத்தில் இணைப்பதற்காக பணம் கொடுக்கின்றார்கள்; ஆனால், இங்கே, நம்முடைய ஜமாஅத்தில் இணைவதற்கு அவரிடம் இருந்து பணம் வாங்குகின்றோம்" என்று நகைச்சுவையாக கூறினார்கள். இதற்கு அந்த நபர் கூறினார்: நான் மாதாந்திரம் 300 கர்க்கிஸ் கட்டாயச் சந்தாவில் செலுத்துவேன் என்று கூறினார். சிறிது காலத்திற்குப் பிறகு 400 ஆக மாற்றிவிட்டார். பிறகு சிறிது காலம் கடந்த உடன் 800 ஆக மாற்றி விட்டார். பிறகு சிறிது காலம் கடந்த உடன் யாரிடமும் கூறாமலேயே ஓர் ஆயிரம் ஸூம் தொகையை மாதாந்திர சந்தாவாக செலுத்த ஆரம்பித்து விட்டார்.

ஃபிரான்ஸ் அமீர் ஸாஹிப் அவர்கள் மொராக்கோ சுற்றுப் பயணத்தில் சென்றிருந்தார்கள். அங்கு புதிதாக பைஅத் செய்த அஹ்மதிகளை தியாகம் மற்றும் பற்று நிறைந்தவர்களாக கண்டார்கள். கிலாஃபத்துடன் அவர்களுக்கு அளவில்லா நேசம் இருந்தது. அவர்களுக்கு பொருள் தியாகம் தொடர்பாக கூறப்பட்டபோது மேலும், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் மேற்கோள்கள் படித்துக் காண்பிக்கப்பட்ட பொழுது பிறகு கூறுகின்றார்கள்: சில நாட்களுக்குப் பிறகு ஒரு நண்பர் சத்ர் ஸாஹிபை அணுகினார். மேலும் ஒரு பெரும் தொகையை அவர்களிடம் கொடுத்தார். மேலும் கூறினார். நான் எப்பொழுது அஹ்மதியாக ஆகினேனோ அந்த நாளிலிருந்து இப்பொழுது வரை உள்ள சந்தா ஆகும்

**(இதன் தொடர்ச்சி அடுத்த இதழில்.. )**

தமிழாக்கம்
மவ்லவி ஷஹாபுதீன்

* * * * * *

## பொருள் தியாகத்தில் ஜமாஅத் உறுப்பினர்களின் நிகரற்ற உதாரணம் மற்றும் இறைவனின் அருள்கள்

### ஹுஸூர் அவர்களின் உரைகளின் ஒளியில்

(காதியான் ஜல்ஸா சொற்பொழிவு -2024)

மவ்லானா ரஃபீக் அஹ்மது ஸாஹிப் பேக் (நாஸிர் பைத்துல் மால் காதியான்)

لَنۡ تَنَالُوا الۡبِرَّ حَتّٰى تُنۡفِقُوۡا مِمَّا تُحِبُّوۡنَ

நான் தற்போது ஓதிய வசனத்தில் அல்லாஹ் கூறுகின்றான்.

நீங்கள் உங்களுக்கு விருப்பமான பொருள்களிலிருந்து (இறைவனுக்காகச்) செலவு செய்யாத வரையில் உங்களால் ஒருபோதும் முழுமையான நன்மையினைப் பெறமுடியாது. நீங்கள் எப்பொருளைச் செலவு செய்கின்றீர்களோ அதனை நிச்சயமாக அல்லாஹ் நன்கு அறிகின்றான். (திருக்குர்ஆன் 3: 93)

ஹஸ்ரத் முதலாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் தம்முடைய திருக்குர்ஆன் விளக்கவுரையில்

لَنۡ تَنَالُوا الۡبِرَّ حَتّٰى تُنۡفِقُوۡا مِمَّا تُحِبُّوۡنَ

.என்ற இந்த வசனத்தைப் பற்றி கூறுகின்றார்கள்:

திருக்குர்ஆனில் சூரா பக்கராவில் எங்கு முதல் ருகூ ஆரம்பமாகிறதோ அங்கு இறையச்சம் உடையவர்கள் தொடர்பாக அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான்:

وَمِمَّا رَزَقۡنٰهُمۡ يُنۡفِقُوۡنَ

அதாவது அல்லாஹ் அவர்களுக்கு என்ன வழங்கினானோ அவற்றிலிருந்து அவர்கள் செலவு செய்வார்கள். இது முதல் ருகூவில் கூறப்பட்ட விஷயமாகும். பிறகு இந்த அதிகாரத்தில் பல இடங்களில் இறைவழியில் செலவு செய்வது தொடர்பாக பெரும் பெரும் வலியுறுத்தல்கள் வந்திருக்கின்றன....... ஆகையால் நீங்கள் உண்மையான நன்மையை உங்களுடைய செல்வத்தை செலவு செய்யாமல் அடைய முடியாது.

مِمَّا تُحِبُّوۡنَ

என்பது என்னுடைய பார்வையில் செல்வமாகும். ஏனெனில் அல்லாஹ் கூறுகின்றான்:

وَاِنَّهٗ لِحُبِّ الۡخَيۡرِ لَشَدِيۡدٌ

பொருள்: மனிதனுக்கு செல்வம் மிகவும் விருப்பத்திற்குரியதாக இருக்கின்றது. எனவே உண்மையான நேசத்தை பெறுவதற்கு கட்டாயம் தன்னுடைய விருப்பமான செல்வத்தை செலவு செய்ய வேண்டும்.

(ஸமீமா அக்பார், பத்ர் காதியான் 8, ஜூலை 1909)

கண்ணியத்திற்குரிய அவையோர்களே!

அல்லாஹ் இந்த காலகட்டத்தில் நமக்கு கிலாஃபத்தே அஹ்மதிய்யாவின் மிக உயரிய அருளை வழங்கியிருக்கின்றான். இதன் மூலமாக நம்முடைய தர்பிய்யத் மற்றும் தூய்மைக்கான ஏற்பாடு செய்திருக்கின்றான். திருக்குர்ஆனில் உள்ளத்தின் தூய்மைக்கு மிக முக்கியமான வழியாக இறை வழியில் செலவு செய்வது சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. ஹுஸூர் அவர்கள் ஜமாஅத் நபர்களுக்கு அல்லாஹ்வின் வழியில் தம்முடைய செல்வத்தை செலவு செய்வது தொடர்பாக மீண்டும், மீண்டும் வலியுறுத்தி இருக்கின்றார்கள். இறைவழியில் செலவு செய்வதற்கான வலியுறுத்தல் மற்றும் ஆர்வமூட்டுதல் போன்றவற்றை அவ்வப்பொழுது திருக்குர்ஆனுடைய வசனங்கள் மற்றும் அதனுடைய நுட்பமான விளக்கங்களிலிருந்து எடுத்துரைக்கின்றார்கள். சில சமயம் பொருள் தியாகத்தின் பக்கம் கவனமூட்டுவதற்காக ஸஹாபா பெருமக்கள் (ரிஸ்வானுல்லாஹி அலைஹிம்) அவர்களின் பொருள் தியாகங்களின் உள்ளத்தை கவரக் கூடிய வரலாற்றை முன்வைக்கின்றார்கள். அன்பிற்குரிய ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களின் உரைகள் மற்றும் குத்பாக்களில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் ஸஹாபிகள் மேலும் உலகளாவிய அஹ்மதிய்யா ஜமாஅத்தின் பற்றுள்ளவர்களின் பொருள் தியாகங்களின் ஈமானிய சம்பவங்கள் நம்முடைய ஈமான் மற்றும் நம்பிக்கையில் வலுவூட்டக் கூடியதாக அமைந்து விடுகின்றன. பொருள் தியாகத்தின் சம்பவங்கள் ஸஹாபிகளுடைய தியாகத்தின் நினைவை புதுப்பித்து விடுகின்றது. தியாகத்தின் இந்த சம்பவங்களை பார்த்து ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் இந்த கவிதை தாமாகவே நம்முடைய நாவிலிருந்து வெளிப்படுகிறது.

.முபாரக் ஓ ஜோ அப் ஈமான் லாயா
ஸஹாபா ஸே மிலா ஜப் முஜ்கோ பாயா

இது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் உண்மைக்கு ஒரு வலுவான ஆதாரம் ஆகும். அதாவது அன்னாருடைய ஜமாஅத்தின் உறுப்பினர்கள் நன்மை, இறையச்சம் மற்றும் தூய்மைப்படுத்துதல் ஆகியவற்றில் அசாதாரண முன்னேற்றங்களை அடைந்துள்ளனர்.

ஆகையால் அன்னார் (அலை) கூறுகின்றார்கள்:

நம்முடைய ஜமாஅத்தில் என்ன முன்னேற்றம் மற்றும் மாற்றங்கள் தென்படுகின்றனவோ அவை முழு காலகட்டத்திலும் தற்போது வேறு எங்குமே தென்படுவதில்லை.

( மல்ஃபூஸாத், தொகுதி 10, பக்கம் 243)

மேலும் கூறுகின்றார்கள்:

நான் ஆணையிட்டு கூறுகின்றேன்: குறைந்தபட்சம் ஒரு லட்சம் நபர்கள் என்னுடைய ஜமாஅத்தில் எப்படிப்பட்டவர்களாக இருக்கின்றார்கள் என்றால் உண்மையான உள்ளத்துடன் என் மீது நம்பிக்கை வைத்துள்ளார்கள். நல்ல அமல்களை செய்கின்றார்கள்.என்னுடைய ஜமாஅத் எந்த அளவிற்கு நன்மை மற்றும் திறமைகளில் முன்னேற்றம் அடைந்திருக்கின்றது என்றால் இதுவும் ஓர் அற்புதம் என்று பார்க்கின்றேன். ஆயிரக்கணக்கான மக்கள் உள்ளத்தால் அர்ப்பணம் ஆகின்றார்கள். ஒருவேளை இன்று அவர்களிடம் உங்களுடைய முழு செல்வத்தையும் விட்டுவிடுங்கள் என்று நான் கூறினால் அவர்கள் அனைத்தையும் விட்டு விடுவதற்காக தயாராகி விடுவார்கள். (ஸீரத்துல் மஹ்தி,பாகம் 1, பக்கம் 145)

கண்ணியத்திற்குரிய அவையோர்களே! ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் ஜமாஅத் உறுப்பினர்களில் பற்று மற்றும் பொருளாதார தியாகத்தின் நிகரற்ற உதாரணங்கள் அன்னாருடைய காலகட்டத்துடன் நின்று போகவில்லை. மாறாக இன்றும் இறைவழியில் செலவு செய்யக் கூடியவர்களுடைய நிகரற்ற உதாரணங்களை நாம் பார்த்துக் கொண்டிருக்கின்றோம்.

ஹஸ்ரத் கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறுகின்றார்கள்:

அன்னாருடன் நேரடியாக தொடர்பு கொண்டவர்கள் அருள்களை பெற்று அந்த தரத்தை அடைந்தார்கள். மேலும் அன்னாரிடம் இருந்து மகிழ்ச்சிக்கான சான்றிதழ்களை பெற்றார்கள். ஆனால் இந்த பற்று மற்றும் கலப்பற்றத் தன்மை காலம் கடந்ததுடன் நின்று விட்டதா என்ன ? நிச்சயமாக இல்லை ; எவ்வாறு என்றால் நான் கூறியது போன்று இன்றும் எவ்வாறான மக்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களுடைய ஜமாஅத்தில் ஆண்களிலிருந்தும், பெண்களில் இருந்தும் குழந்தைகளிலிருந்தும் இருக்கின்றார்கள். அவர்கள் பற்று மற்றும் கலப்பற்றத் தன்மையில் முன்னேற்றம் அடைந்து கொண்டிருக்கின்றார்கள். ஒரு சில அல்லது குறிப்பிட்ட இடத்தில் மட்டும் அல்ல. மாறாக, ஆயிரக்கணக்கான எப்படிப்பட்ட உதாரணங்கள் எல்லாம் இருக்கின்றன! மேலும் உலகத்தினுடைய பல்வேறு நாடுகளில் பரவிக் கிடக்கின்றன!

لَنۡ تَنَالُوا الۡبِرَّ حَتّٰى تُنۡفِقُوۡا مِمَّا تُحِبُّوۡنَ

என்பதன் சரியான ஞானத்தை அவர்கள் பெற்றிருக்கின்றார்கள். அவர்கள் தியாகத்தில் முன்னேற்றம் அடைந்து கொண்டே செல்கின்றார்கள். அவர்களில் பழையவர்களும் இருக்கின்றார்கள். மேலும் புதிதாக இணையக் கூடியவர்களும் இருக்கின்றார்கள். அவர்களுக்கு அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொண்டு சில காலமே ஆகியுள்ளது. ஆனால், அவர்கள் எப்படிப்பட்டவர்களாக இருக்கின்றார்கள் என்றால் அவர்களுக்கு சில மாதங்களே ஆகி உள்ளது; அவர்களுடைய முன்னுரிமை அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொள்வதற்கு முன்பு உலகியல் விருப்பங்களாக இருந்தன. ஆனால், அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொண்டதற்கு பிறகு அவர்கள்



மார்க்கத்திற்காக தங்களுடைய விருப்பமான செல்வம் அல்லது அவர்களிடம் என்ன இருக்கின்றதோ அதனை தியாகம் செய்வதற்காக தயாரகி விட்டார்கள். இந்த புரட்சி இந்த காலகட்டத்தில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் உருவாக்கியதாகும். அம்மக்களுடைய முன்னுரிமையை மாற்றி விட்டார்கள். மேலும் இன்றும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் கூற்றுகள் உண்மையாகிக் கொண்டிருக்கின்றன. அவர்கள் எவ்வாறான மக்கள் என்றால் அவர்களுடைய தியாகத்தை பார்த்து வியப்பாக இருக்கின்றது.

இன்று ஜமாஅத்தில் நம்மில் பெரும்பாலான நபர்கள் எப்படிப்பட்டவர்கள் என்றால் இந்த விஷயத்திற்கு நாம் சாட்சி பகிரக் கூடியவர்களாக இருக்கின்றோம். அதாவது அவர்களுடைய மூதாதையர்கள் கடினங்களை சகித்துக் கொண்டு தங்களுடைய தூய வருமானத்திலிருந்து தியாகங்களை செய்தார்கள். அல்லாஹுதஆலா அவர்களுடைய சந்ததிகளுக்கு செல்வம் மற்றும் ஆன்மாவில் அளவில்லாத அருள்களை வழங்கினான்.

ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களுடைய ஒரு சம்பவம் உள்ளது. அதை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் அன்னார் (ரலி) குறித்து எழுதியுள்ளார்கள். ஆனால், ஒவ்வொரு முறையும் அதை படிக்கும் பொழுது ஈமானில் ஒரு புத்துணர்ச்சி உருவாகின்றது. மேலும் தியாகத்தின் ஒரு புதிய ஆன்மா பிறக்கின்றது.

அன்னார் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

நான் மட்டும் ஒப்புக் கொண்டிருந்தால் அவர் தன்னிடமுள்ள ஒவ்வொரு பொருளையும் இவ்வழியில் அர்ப்பணம் செய்து விட்டு ஆன்மிக ரீதியில் எனக்கு அருகே இருப்பதை போன்று பௌதீக ரீதியிலும் இருப்பார். மேலும் எப்போதும் உரிமையை நிறைவேற்றுவார்.

அவரது கடிதத்திலிருந்து சில வரிகளை வாசகர்களுக்காக நான் எடுத்துரைக்கின்றேன்.

எனது உயிர் பிரியும் வரை நான் இவ்வாறே தொடர்ந்து செய்து வருவேன்.தாங்கள் காட்டும் வழியில் என்னை அர்ப்பணித்துக் கொள்வேன். என்னிடமுள்ள எதுவும் என்னுடையதல்ல ; அது தங்களுடையதே!

மதிப்பிற்குரிய தலைவரே!. வழிகாட்டியே! மார்க்கத்தைப் பரப்புவதற்காக என்னுடைய முயற்சியிலான எல்லா சம்பாத்தியமும் செலவிடப்படுமானால் எனது வாழ்வின் குறிக்கோள் நிறைவேறிவிட்டதாக நான் கருதுவேன் என்று நான் உண்மையாகக் கூறுகின்றேன். பராஹீனே அஹ்மதிய்யா நூலுக்கு சந்தா வாக்களித்திருப்பவர்களால் அதனை அச்சிடுவதில் கால தாமதம் ஏற்பட்டால் இந்தச் சிறிய ஊழியத்தைச் செய்வதற்கு எனக்கு அனுமதி வழங்குங்கள். என்னுடைய கையிலிருந்து அவர்களுடைய சந்தா தொகையை நானே தந்து விடுகின்றேன்.

மதிப்பிற்குரிய வழிகாட்டியே, அறிவுறுத்தும் பெருந்தகையே இந்தத் தகுதியற்ற எளியவனுக்கு இன்னொரு வேண்டுகோளும் இருக்கிறது. அதனைத் தாங்கள் ஏற்றுக் கொண்டால் அது என்னுடைய நற்பேறு ஆகும். அதாவது பராஹீனே அஹ்மதிய்யா நூலை அச்சிடுவதற்கு ஆகும் செலவு அனைத்தையும் என்னிடமிருந்து வசூலித்துக் கொள்ளும்படி நான் வேண்டுகிறேன். அதாவது புத்தக விற்பனையால் கிடைக்கும் தொகையைத் தங்களுடைய தேவைகளை நிறைவேற்றும் வகையில் செலவிட்டுக் கொள்ளலாம். தங்களின் பேரில் நான் கொண்டுள்ள மதிப்பு ஃபாரூக்குடைய மதிப்பை ஒத்ததாகும். இந்நோக்கத்திற்காக என்னிடமுள்ள யாவற்றையும் அர்ப்பணித்து விடுவதற்கு நான் ஆயத்தமாயிருக்கிறேன். எனது மரணம் ஸித்தீகுகளின் மரணமாக இருக்க துஆ செய்யுங்கள்.
(இஸ்லாத்தின் வெற்றி, ரூஹானீ கஸாயீன்,தொகுதி 3, பக்கம் 36)

(அதாவது பணமும் தருகிறார்கள். மேலும் கூறுகின்றார்கள்: இதற்குப் பிறகு இதிலிருந்து என்ன வருமானம் வருகின்றதோ அதையும் உங்களுடைய பணிக்காக செலவு செய்து கொள்ளுங்கள் என்கிறார்கள்)

பிறகு முன்ஷீ ஸஃபர் அஹ்மது (ரலி) அவர்களுக்கு லூதியானாவில் ஒரு முக்கிய தப்லீஃக் பிரசுரத்தை அச்சிட்டு வெளியிடுவதற்கு 60 ரூபாய் தேவைப்பட்டது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் ஹஸ்ரத் முன்ஷீ ஸஃபர் அஹ்மத் ஸாஹிபிடம், உங்களுடைய ஜமாஅத் இந்த செலவினத்தை ஏற்பாடு செய்ய முடியுமா என்ன? அதற்கு, இன்ஷா அல்லாஹ்; ஏற்பாடு செய்யலாம் என்று ஹஸ்ரத் முன்ஷி ஸாஹிப் (ரலி) கூறினார்கள்.

ஆனால், அன்னார் எவரிடமும் இது தொடர்பாக பேசாமல் தன்னுடைய மனைவியுடைய ஒரு நகையை 60 ரூபாயக்கு விற்பனை செய்துவிட்டார்கள். மேலும் ஹஸ்ரத் ஸாஹிபிடம் கொடுத்து விட்டார்கள். கபூர்தலாவின் மற்றொரு பற்றுள்ள ஸஹாபி ஹஸ்ரத் முன்ஷி ஆரூடே கான் ஸாஹிப் தன்னுடைய நண்பர் முன்ஷி ஸஃபர் அஹ்மது ஸாஹிபோடு இதனால் ஆறு மாதம் வரை கோபித்துக் கொண்டார்கள். ஏனெனில் அவரை இந்த பொருளாதார தியாகத்தில் இருந்து பங்கு பெற விடாமல் தடுத்தார்கள். மேலும் தாமே முழு தியாகத்தையும் செய்தார்கள்.

அல்லாஹ்! அல்லாஹ்! இவ்வாறான பற்றுள்ளவர்கள் தான் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களுக்கு கிடைத்தார்கள். சிறிது சிறிதாகப் பாருங்கள்! ஹஸ்ரத் ஸாஹிப் ஜமாஅத்திடம் உதவி செய்ய கூறுகின்றார்கள். ஆனால் ஒரு தனி மனிதர் அதுவும் ஏழை மனிதர் எழுகின்றார்: தம்முடைய ஜமாஅத்தில் இது பற்றி சொல்லாமலேயே தன்னுடைய மனைவியின் நகை விற்பனை செய்கின்றார். அந்த தொகையை முழுமையாக செலுத்துகின்றார். மேலும் ஹஸ்ரத் ஸாஹிபிடம் இந்தத் தொகையை தான் தருகின்றேனா அல்லது ஜமாஅத்திடமிருந்து செலுத்தப்படுகின்றதா என்பதைக் கூட கூறவில்லை. ஏனெனில் ஹஸ்ரத் ஸாஹிபின் துஆ முழு ஜமாஅத்திற்கும் கிடைக்க வேண்டும் என்ற எண்ணம். மறுபுறம் மற்றொரு பற்றுள்ளவர் இந்த விஷயத்தை தெரிந்து ஹஸ்ரத் ஸாஹிபுக்கு ஒரு தேவை ஏற்பட்டது; மேலும் நான் இந்த தியாகத்தில் இருந்து பயனடையாமல் போய்விட்டேனே! என்று எந்த அளவிற்கு நிராசை அடைந்து விட்டார் என்றால் தன்னுடைய நண்பருடன் ஆறு மாதம் வரை கோபித்துக் கொண்டார். அதாவது நீங்கள் ஹஸ்ரத் ஸாஹிபின் தேவையை என்னிடம் ஏன் கூறவில்லை? என்று இருந்து விட்டார்.
(அல்ஃபஸ்ல், செப்டம்பர் 4, 1914)

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

அசல் நோக்கத்தை பெறுவதற்கு ஐந்தாவது காரணியாக இறைவன் முஜாஹிதாவை கூறியிருக்கின்றான். அதாவது தம்முடைய செல்வத்தை அவனுடைய வழியில் செலவு செய்வதன் மூலமாக மேலும் தம்முடைய சக்தியை இறைவனுடைய வழியில் செலவு செய்வதன் மூலமாக மேலும் தம்முடைய உயிரை இறைவனுடைய வழியில் செலவு செய்வதன் மூலமாக மேலும் தம்முடைய சிந்தனையை இறைவனுடைய வழியில் செலவு செய்வதன் மூலமாக அவனை தேட வேண்டும். எவ்வாறு என்றால் அவன் கூறுகின்றான்:

தம்முடைய செல்வம் தம்முடைய உயிர் மேலும் தம்முடைய நஃப்ஸ் ஆகியவற்றுடன் அதனுடைய எல்லா விதமான சக்திகளையும் கொண்டு இறைவனுடைய வழியில் செலவு செய்யுங்கள். மேலும் நாம் என்ன உங்களுக்கு அறிவும், சிந்தனையும், புரிதலும், திறமையும் வழங்கி இருக்கின்றோமோ அவை அனைத்தையும் இறை வழியில் செலவு செய்யுங்கள். எவர் ஒருவர் நம்முடைய வழியில் எல்லா விதமான முயற்சிகளையும் மேற்கொள்வாரோ அவருக்கு நம்முடைய வழியை காண்பித்து விடுகின்றோம். (இஸ்லாமிய போதனைகளின் தத்துவ ஞானம். ரூஹானீ கஸாயீன், தொகுதி 10, பக்கம் 418 - 419)

பிறகு அன்னார் (அலை) ஒரு கனவு மற்றும் ஓர் இல்ஹாம் தொடர்பாக கூறுகின்றார்கள்:

கனவு பார்த்தேன். அதில் ஒரு சுவரின் மீது ஒரு கோழி உட்கார்ந்து உள்ளது. மேலும் அது என்னவோ பேசுகின்றது. எல்லா சொற்களும் ஞாபகத்தில் இல்லை. ஆனால், கடைசியாக என்ன சொன்னதோ அது ஞாபகத்தில் இருக்கின்றது:

إِنْ كُنْتُمْ مُسْلِمِيْنَ





பொருள்:

நீங்கள் முஸ்லிம்கள் என்றால்

இதற்குப் பிறகு விழித்துக் கொண்டேன். பிறகு என்ன சிந்தனை வந்தது என்றால், கோழி இது என்ன சொற்களை பேசி இருக்கின்றது. பிறகு இல்ஹாம் வந்தது.

اَنْفِقُوْا فِيْ سَبِيْلِ اللّٰهِ

اِنْ كُنْتُمْ مُسْلِمِيْنَ

நீங்கள் முஸ்லிம்கள் என்றால் அல்லாஹ்வுடைய வழியில் செலவு செய்யுங்கள். கூறுகின்றார்கள்:

கோழியுடைய பேச்சு மற்றும் இல்ஹாமுடைய சொற்கள் இரண்டும் ஜமாஅத் சார்பாக சொல்லப்பட்டதாகும். இரண்டு சொற்களுமே நம்முடைய ஜமாஅத்தை குறித்து பேசப்பட்டதாகும். ஏனெனில், இன்று பணத்தின் தேவை இருக்கின்றது. லங்கரிலும் (அதாவது விருந்தினர் மாளிகையின்) செலவீனங்கள் அதிகமாக உள்ளன. மேலும் கட்டிடத்திலும் மிக அதிகமாக செலவுகள் ஆகிக் கொண்டிருக்கின்றன. இதன் காரணத்தினால் தான் ஜமாஅத்திற்கு இந்த கட்டளை மீது கவனம் செலுத்துவது அவசியமாகும்.

பிறகு கூறினார்கள்:

கோழி தன்னுடைய செயல் மூலமாக இறைவனுடைய வழியில் செலவு செய்ய வேண்டும் என்கிறது. ஏனெனில், அது மனிதனுக்காக தன்னுடைய உயிரை தியாகம் செய்து விடுகின்றது. மேலும், மனிதனுக்காக அறுபட்டு விடுகின்றது. கோழி மிகவும் உழைப்புடனும், கஷ்டப்பட்டும் ஒவ்வொரு நாளும் மனிதனுக்காக முட்டையை இடுகின்றது.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: ஆகையால் நம்முடைய ஜமாஅத்தின் நம்பிக்கையாளர்கள் நம்முடைய பேச்சைக் கேட்கவில்லை என்றாலும் இந்த கோழியுடைய பேச்சையாவது கேளுங்கள். ஆனால் அனைவரும் ஒன்று போல் இல்லை. தம்முடைய சக்திக்கு அதிகமாக தொண்டு செய்யக் கூடிய எத்தனையோ பற்றுள்ளவர்கள் இருக்கின்றார்கள். இறைவன் அவர்களுக்கு அதற்கான நற்கூலியை வழங்குவானாக!

(மல்ஃபூஸாத், தொகுதி 4, பக்கம் 582)

ஹஸ்ரத் இப்னு மஸ்ஊது (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:

பெருமானார் (ஸல்) அவர்கள் கூறுகின்றார்கள்: இரண்டு நபர்களை தவிர வேறு எவரிடமும் பொறாமை கொள்ளக் கூடாது. ஒவருக்கு அல்லாஹ் செல்வத்தை வழங்கியிருக்கும்போது அதிலிருந்து நேரான பாதையில் செலவு செய்கின்ற நபர் ஆவார். மற்றொருவர் யார் என்றால், அல்லாஹ் ஒருவருக்கு புரிதலையும், அறிவையும், நுட்பமான ஞானத்தையும் வழங்கி இருக்கும்போது அதன் மூலமாக மக்களுக்கு மத்தியில் உதவி செய்வதற்காக தீர்ப்பும் வழங்குகின்ற நபர் ஆவார். மேலும் மக்களுக்கு கற்பிக்கவும் செய்கின்றவர் ஆவார். (புஹாரி, கிதாபுஸ் ஸகாத்)

எனவே இந்த அறிவும், நுட்பமான ஞானமும் ஓர் அருளாகும். நம்முடைய எதிரிகள் எப்போதும் கூச்சல் போட்டுக் கொண்டே இருக்கின்றார்கள். அதாவது ஜமாஅத் உறுப்பினர்கள் சந்தா ஏன் கொடுக்கின்றார்கள்? நாங்கள் எங்களுடைய ஜமாஅத்திற்கு கொடுக்கின்றோம்; உங்களுக்கு என்ன? இன்ன கடைக்காரர்களை நாம் ஒதுக்கி வைக்க வேண்டும். அவரிடமிருந்து பொருட்களை வாங்கக் கூடாது. ஏனெனில், அவர் அதில் இருந்து கிடைக்கும் வருமானத்தில் சந்தா கொடுக்கின்றார். உங்களுடைய பணம் மூலமாக சந்தா செல்கின்றது. சிலசமயம் பிரச்சாரம் செய்கின்றார்கள். நம்முடைய உழைப்பினால் ஏற்படுகின்ற வருமானத்திற்கு எதிராக பெரும் கூச்சல் எழுந்து கொண்டு இருக்கின்றது. இவர்கள் சந்தா கொடுக்கின்றார்கள். மேலும் எதிரிகளுடைய விண்ணப்பம் என்னவென்றால், ஜமாஅத்தினுடைய அனைத்து ஃபண்டுகளையும் அரசாங்கம் தன்னுடைய கட்டுப்பாட்டில் எடுத்துக் கொள்ள வேண்டும் என்று அரசாங்கத்திற்கு ஆலோசனை வழங்குகின்றனர். பாவம் இவர்கள் காழ்ப்புணர்ச்சியின் நெருப்பில் எரிந்து கொண்டிருக்கின்றார்கள். அவர்களுடைய வறண்ட பூமியில் பரக்கத் எவ்வாறு உருவாகும்? எனவே காழ்ப்புணர்ச்சியை தவிர அவர்களிடம் ஒன்றுமே எஞ்சி இருப்பதில்லை.

நாம் அல்லாஹ்வுடைய கட்டளையின் மீது செயல்படுகின்றோம் என்பதனால் மகிழ்ச்சி அடைகின்றோம். மேலும் அல்லாஹ்வுடைய தூதர் நம் மீது பெருமிதம் கொண்டுள்ளார்கள். ஸஹாபிகள், பெருமானார் (ஸல்) அவர்களிடமிருந்து எப்பொழுது ஏதாவது ஒரு அறிவிப்பு வரும்; அதன்படி செயல்படலாம் என்ற சிந்தனையிலேயே எப்போதும் இருப்பார்கள். செல்வந்தர்கள் தம்முடைய அபிவிருத்தியின் காரணத்தினால் செலவு செய்கிறார்கள். ஆனால், ஏழைகளும் பின் தங்கியவர்கள் அல்ல. அவர்களும் தங்களுடைய பங்களிப்பை காட்டுகிறார்கள். அது பனித்துளிகள் அளவாக இருந்தாலும் சரியே!

ஹஸ்ரத் அபூ மஸ்ஊது அன்ஸாரி (ரலி) அவர்களிடமிருந்து ஓர் அறிவிப்பு உள்ளது. அதாவது ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் சதக்கா கொடுப்பதற்காக வலியுறுத்தியபோது,எங்களில் ஒருவர் கடைவீதிக்கு செல்கின்றார். மேலும் உழைத்து கூலி வேலை செய்கிறார். மேலும் அதிலிருந்து கிடைக்கின்ற கூலி ஓர் அளவு தானியமாக இருக்கட்டும் அல்லது என்ன கிடைத்தாலும் சரி அதை ஸதக்கா செய்து விடுகின்றார். மேலும் தமக்கென்று அதிலிருந்து எந்த பங்கையும் எடுக்கக் கூடாது என்ற முயற்சியும் இருக்கின்றது. மேலும் உழைத்து பங்களிக்கின்றார். அறிவிப்பாளர் கூறுகின்றார். அதில் சிலருடைய நிலை எவ்வாறானதாக இருக்கின்றது என்றால் அவர்களிடம் ஓர் லட்சம் திர்ஹம் இருக்கின்றது. அவர்கள் கூலி வேலை செய்து சந்தா செலுத்துகின்றார். (புஹாரீ-கிதாபுல் இஜாரியா)

இதுதான் தியாகத்தின் அருளாகும். ஆக எந்த மக்கள் எல்லாம் நாம் ஏழையாக இருக்கின்றோம் என்று சிந்திக்கின்றார்களோ சிலர் கூறுகின்றார்கள். நிலைமை உகந்ததாக இல்லை ; எனவே சந்தா செலுத்த முடியாது; எனவே மன்னிப்பு தாருங்கள் என்று கூறுகின்றனர். இவ்வாறான மக்கள் சிந்திக்க வேண்டும். சந்தா கொடுக்காமல் இருந்தால் நாம் அல்லாஹ்வுடைய அருள் மற்றும் அவனுடைய வாக்குறுதியிலிருந்து வெளியேறி விடுவோம். பாகிஸ்தானிலும் ஏழைகள் அதிகமாக இருக்கின்றார்கள். ஆனால், அங்கு அல்லாஹ்வுடைய அருளின் மூலமாக மிகவும் ஆர்வத்துடன் ஒவ்வோர் அறிவிப்பிலும் பங்கு பெறுகின்றார்கள். மேலும் சந்தா செலுத்துகின்றார்கள்.

ஆக எந்த அஹ்மதிகளுக்கு எல்லாம் இதனுடைய ரகசியம் தெரிந்திருக்கின்றதோ அவர்கள் எந்த அளவிற்கு போட்டிபோட்டுக் கொண்டு சந்தா செலுத்துகின்றார்கள் என்றால் சில தருணங்களில் அவர்களை தடுக்க வேண்டியதும் வருகின்றது. ஆனால், அவர்களுடைய பதில் என்னவென்றால், நாங்கள் எங்களுடைய இறைவனுடன் ஒரு வியாபாரம் செய்து இருக்கின்றோம். நீங்கள் அதற்கு இடையில் வராதீர்கள். இந்த வெளிப்பாடு உலகத்தின் ஒவ்வொரு பகுதியிலும் ஒவ்வொரு சமுதாயத்திலும் தென்படுகின்றது. மேலும் அஹ்மதிகளுடைய ஒவ்வொரு சூழலிலும், ஒவ்வொரு சமுதாயத்திலும் தென்படவும் வேண்டும். எவர்களிடம் குறை இருக்கின்றதோ அவர்கள் இதன் பக்கம் கவனம் செலுத்த வேண்டும். மேலும் அல்லாஹ்வுடைய அருளினால் பெரும் எண்ணிக்கையில் அவர்கள் ஆஃப்ரிக்காவை சார்ந்த ஏழை நாடாக இருந்தாலும் அல்லது வசதி படைத்த நாடுகளாக இருந்தாலும் தம்முடைய நிலைப்பாட்டை வெளிப்படுத்துகின்றார்கள்.

ஆஃப்ரிக்காவை சார்ந்த இந்த மக்கள் தங்களுடைய செலவுகளை மட்டும் செய்கின்றார்கள் என்று ஒருபோதும் எண்ண வேண்டாம். மாறாக, இவர்கள் பெரும் பெரும் தியாகத்தின் உதாரணத்தை நிலை நாட்டுகின்றார்கள். மேலும் தங்களுடைய சக்திக்கு ஏற்றவாறு மற்ற சந்தாவிலும் பங்கு பெறுகின்றார்கள்.

இப்பொழுது கானா நாட்டினுடைய உதாரணத்தை உங்கள் முன்பு முன்வைக்கின்றேன். நம்மிடம் மிக பெரிய தியாகம் செய்யக் கூடிய மக்களும் இருக்கின்றார்கள். நம்முடைய யூஸுஃப் ஆடோசை ஸாஹிப் அவர் உள்ளூர் மிஷனரியும் ஆவார். அவர் மருந்துகளும் தயார் செய்து கொண்டிருந்தார். சிறிய வியாபாரமும் இருக்கின்றது. அவர் நோய்வாய்ப்பட்டும் இருந்தார். அவருடைய காலில் ஒரு ஆழமான காயம் இருக்கின்றது. அது எலும்பு வரை சென்று விட்டது. மிகவும் வலியை சகித்துக் கொண்டிருக்கிறார். ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹ்) அவர்களின் மருத்துவம் மற்றும் துஆவினால் அல்லாஹுத்தஆலா அருள் செய்தான். காயமும் சரியாகிவிட்டது. இதற்குப் பிறகு அவர்கள் முன்பை விட அதிகமாக ஜமாஅத்திற்கு தொண்டு செய்ய ஆரம்பித்தார்கள்.மேலும் வியாபாரமும் செய்தார்கள். ஏனெனில், அவர்களுக்கு சில செடி கொடிகளில் மருந்து உருவாக்கும் ஆர்வம் இருந்தது. எவ்வாறான மருந்துகள் தயார் செய்வார்கள் என்றால் அதன்

#12 KNG Garden
sundakamuthur main Road,
Kuniyamuthur,
Coimbatore-641008
93632 27227
succesraoof@gmail.com
SUCCESS INDIA
PROMOTERS
M. Abdul Raoof
936322729

**நூருல் இஸ்லாம் துறையின் நேரங்கள்**

தொலைபேசி எண் : 1800 103 2131

இந்த *TOLL FREE* எண்ணில்

∴போன் செய்து அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத் தொடர்பான தகவல்களை அறிந்து கொள்ளலாம்.

தினந்தோறும் காலை 8.30 மணியிலிருந்து 10.30 மணி வரை (வெள்ளிக்கிழமை விடுமுறை நாள்)

**EDITOR**
Moulavi.O.M. MUZZAMMIL AHMAD
**SUB EDITOR**
Moulavi. ABDUR RAHMAN TAHIR
Mobile : + 91 96774-14441
+91 88381-58410
E-mail : subeditortamil@gmail.com
Website : www.akhbarbadr.in

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

Weekly **BADAR** Qadian

Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

Postal Reg.No. GDP-39/2023-2025 Vol. 10 Thursday 05 JUNE 2025 Issue No. 23

**MANAGER**
SHAIKH MUJAHID AHMAD
Mobile : +91 99153-79255
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.600/- (Per Issue Rs. 11/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

மூலமாக வியாபாரம் நன்கு அபிவிருத்தி ஆனது மிகவும் பொருளாதாரமும் விரிவடைந்தது. அதை அவர்கள் சிந்தித்து கூட பார்க்கவில்லை. ஆனால், இந்த பணத்தை வைத்து அமர்ந்து கொள்ளவில்லை. மாறாக தன்னுடைய வாக்குறுதிக்கு ஏற்றவாறு ஜமாஅத்திற்காக மிக அதிகமாக செலவு செய்தார்கள். மேலும் செய்கின்றார்கள். பல்வேறு கட்டிடங்கள் மற்றும் பள்ளிவாசல்களை கட்டிக் கொடுத்தார்கள். அழகான பள்ளிவாசல்களைக் கட்டினார்கள்; சிறிய சிறிய பள்ளிவாசல்கள் அல்ல! மேலும் இப்பொழுதும் தியாகம் செய்து கொண்டிருக்கின்றார்கள்.

எனவே நம்முடைய அஹ்மதிய்யா ஜமாஅத்தில் பல்வேறு பொருள் தியாகங்களுக்கான அறிவிப்புகள் செய்யபப்பட்டு கொண்டிருக்கின்றன. அல்லாஹ்வின் நெருக்கத்தை பெற மேலும் உள்ளத்தை தூய்மை செய்வதற்கான வழியாக இது உள்ளது. அல்லாஹ் அவனுடைய வழியில் செலவு செய்வதற்கான கட்டளை தருகின்றான் கூறுகின்றான்.

.

وَ مَا لَكُمْ اَلَّا تُنْفِقُوْا فِيْ سَبِيْلِ اللهِ

நீங்கள் அல்லாஹ்வின் வழியில் செலவு செய்யாமல் இருக்க உங்களுக்கு என்ன நேர்ந்தது?

நம்முடைய வாழ்க்கையை சரி செய்வதற்கு பொருளாதார தியாகத்தில் பங்கு பெறுவது மிகவும் அவசியமாகும். மாறாக இது ஓர் எச்சரிக்கையாகும். அதாவது அல்லாஹ்வுடைய வழியில் செலவு செய்யாத நபர்கள் தம்மையே அழிவில் ஆழ்த்திக் கொள்கின்றார்கள்.

எவ்வாறென்றால் அல்லாஹ் கூறுகின்றான்:

وَاَنْفِقُوْا فِيْ سَبِيْلِ اللهِ وَلَا تُلْقُوْا بِاَيْدِيْكُمْ اِلَى التَّهْلُكَةِ

ொருள்: மேலும் அல்லாஹ்வுடைய வழியில் செல்வம் செலவு செய்யுங்கள். மேலும் உங்களுடைய கைகளால் உங்களை அழிவில் ஆழ்த்திக் கொள்ளாதீர்கள்.

மேலும் நான் கூறியதற்கு ஏற்ப இந்த பொருள் தியாகம் ஜமாஅத்தில் இருக்கின்றது. அல்லது கட்டாய சந்தாவின் பக்கம் கவனமூட்டப்படுகின்றது. இவை அனைத்தும் அல்லாஹ்வின் நுட்பமான ஞானத்திற்கு ஏற்றவையாகும். எனவே ஒவ்வோர் அஹ்மதியும் அவர் தம்மை உண்மையில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊத் (அலை) அவர்களின் ஜமாஅத்துடன் தொடர்புபடுத்துகின்றார் என்றால், மேலும் தொடர்புபடுத்த விரும்புகின்றார் என்றால் பின்னர் தம்முடைய ஈமானை பாதுகாப்பதற்காக பொருள் தியாகத்தின் பக்கம் கவனம் செலுத்த வேண்டும். அல்லாஹ்வின் அருளினால் பற்றுள்ளவர்களுடைய ஒரு பெரும் ஜமாஅத் இந்த தியாகத்தில் பங்கு பெற்றுக் கொண்டிருக்கின்றது.

எவ்வாறென்றால், நான் கூறியதற்கு ஏற்ப ஜமாஅத்தில் ஒரு பெரும் எண்ணிக்கை திறந்த மனதுடன் சந்தா கொடுக்கின்றது. மேலும் அல்லாஹ்வின் வழியில் செலவு செய்கின்றது. ஆனால், எவ்வாறான சில நபர்கள் இருக்கின்றார்கள் என்றால் அவர்களுக்கு நல்ல வருமானம் இருக்கின்றது. எனினும் சாக்குபோக்குகளை தேடுகின்றனர். பெரும்பாலானவர்கள் தங்களுடைய செலவுகளை சேர்த்ததற்குப் பிறகு உண்மையான வருமானம் இதுவாகும் என்று கூறுகின்றனர். இதன்படி நாங்கள் சந்தா கொடுப்போம் அல்லது இதற்கு ஏற்றவாறு நாங்கள் சந்தா கொடுப்போம்; எங்களுக்கு வருமானம் எதுவுமே இல்லை ; நிலைமை மிகவும் மோசமாக உள்ளது என்று கூறுகின்றனர். ஆக, அவர்களும் சிந்திக்க வேண்டும். நன்றிகேடு காட்டக் கூடாது. இந்த நன்றி கேடின் காரணத்தினால் நல்ல நிலையில் இருக்கின்ற சூழல் மோசமாகிவிடுவதற்கு வாய்ப்பிருக்கின்றது. அல்லாஹ்வை ஏமாற்ற முடியாது. என்னுடைய வழியில் உங்களுக்கு விருப்பமான செல்வத்தையே செலவு செய்யுங்கள் என்று அல்லாஹ் கூறுகின்றான். உங்களுடைய தேவைகளை பின்னால் விட்டுவிடுங்கள். மேலும் அல்லாஹ்வின் வழியில் செலவு செய்யுங்கள்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊத் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

நீங்கள் உங்களுடைய விருப்பத்தை விட்டுவிடாமல் இறைவனுடைய விருப்பத்தை ஒருபோதும் பெற முடியாது. உங்களுடைய இன்பத்தை விட்டுவிட்டு உங்களுடைய கண்ணியத்தை விட்டுவிட்டு உங்களுடைய செல்வத்தை விட்டுவிட்டு உங்களுடைய உயிரை விட்டுவிடடு அவனுடைய வழியில் எல்லாவிதமான கஷ்டங்களையும் சகித்துக் கொண்டு அது மரணத்திற்கு ஒப்பானதாக உங்களுக்கு முன்னால் தென்பட வேண்டும். ஆனால், நீங்கள் கஷ்டத்தை சகித்துக் கொண்டீர்கள் என்றால் ஒரு நேசத்திற்குரிய குழந்தையைப் போன்று இறைவனுடைய மடியில் வந்து விடுவீர்கள். மேலும் உங்களுக்கு முன் வாழ்ந்த அந்த இறைநேசர்களுடைய வாரிசுகளாக ஆகிவிடுவீர்கள். மேலும் ஒவ்வோர் அருளின் கதவுகளும் உங்களுக்காக திறக்கப்படும். ஆனால் நீங்கள் உங்களுடைய ஆன்மாவினால் உண்மையில் மரணம் அடைந்து விட்டீர்கள் என்றால் அப்பொழுது உங்களில் இறைவன் வெளிப்படுவான். இறைவன் உங்களுடன் இருப்பான். மேலும் நீங்கள் வசிக்கின்ற வீடு அருளுக்குரியதாக ஆகிவிடும். மேலும் அதனுடைய சுவர்களின் மீது இறைவனுடைய ரஹ்மத்துகள் இறங்கும். அது உங்களுடைய வீட்டினுடைய சுவர்களாக இருக்கும். மேலும் அவ்வாறான நபர்கள் வாழுகின்ற நகரம் அருளுக்குரியதாக இருக்கும்.

(அல்வஸிய்யத், ரூஹானீ கஸாயீன்,பாகம் 20, பக்கம் 308)

தியாகங்களில் சில முன்னுதாரணங்களை இப்பொழுது நான் கூறுகின்றேன். ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறுகின்றார்கள்:

ஆஃப்ரிக்காவின் மாலி நாட்டினுடைய ஒரு பற்று உள்ளவருடைய சம்பவம் இதுவாகும். அங்குள்ள முபல்லிஃக் ஸாஹிப் எழுதுகின்றார்கள்:

அவர்களுடைய போஸ்டிங் மாலி ரீஜினுடைய சேகோ வில் ஆகும். ஒருநாள் ஜுமுஆ தொழுகைக்குப் பிறகு முஅல்லிம் ஸாஹிப் ஒரு நபரை என்னிடம் சந்திக்க வைத்தார். அவர் மௌலவிகளுடைய ஒரு பெரிய குடும்பத்தை சார்ந்தவர் ஆவார். அவர்கள் பைஅத் செய்தார்கள். அவர்கள் கூறினார்கள்: நான் சந்தா கொடுப்பதற்காக வந்திருக்கின்றேன். ஏனெனில் நான் இன்று ரேடியோவில் கலீஃபத்துல் மஸீஹ் அவர்களின் சந்தா தொடர்பாக குத்பா கேட்டேன். கூறுகின்றார்கள்: நான் அவருக்கு இறைவழியில் செலவு செய்வதன் அருள்கள் தொடர்பாக

لَنْ تَنَالُوا الْبِرَّ حَتّٰى تُنْفِقُوْا مِمَّا تُحِبُّوْنَ

. என்ற வசனத்தை எடுத்துரைத்தேன். அப்போது, அவர் மிகவும் வியப்புடன் கூறினார்: நான் ரேடியோவில் குத்பாவில் கேட்டேன். இதே வசனம்தான் ஓதப்பட்டது. எனவே நான் ஐந்தாயிரம் ஷேஃபா சந்தா செலுத்துவேன். ஆனால் அதற்குப் பிறகு ஷைத்தான் உள்ளத்தில் தடுமாற்றத்தை ஏற்படுத்தினான். வெறும் 2000 ஷேஃபாவே போதுமானதாகும் என்றான். ஆனால் எப்போது தாங்கள் இதே வசனத்தை மறுபடியும் ஓதுனீர்களோ என்னுடைய உள்ளத்தில் உறுதி ஏற்பட்டு விட்டது. இது அல்லாஹ்வுடைய

..இதன் தொடர்ச்சி 8-ம் பக்கம்...

**National Watch Company**
**Sales & Service**

**B. Mohamed Adil**
93632 06679
99433 38000
196, Trichy Road, Sulur - 641 402.
Somanur, Anuparpalayam, Karumathampatti.

O.A. NIJAM 99947 57172
**O.A.N. Doors & Steels**
V.A. SAIT 99430 30230

All Types of wooden Doors, Skin Doors Steel Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Con-
5C/6-A, Ambai Road, Kulavanikarpuram,
{ opp. Karuna Clinic } Tirunelveli-627005